Registered as a NewsPaper

விலைரூபா-07

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் -8

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | மார்ச் -12 | 25-03-2004 | வியாழக்கிழமை | ஓசை -036

உங்களிடம் தேவை இருக்கிறது
எங்களிடம் கைதேர்ந்த நகைத்
தொழிலாளர்கள் இருக்கின்றார்கள்.



கணேசா நகையகம்

194,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 123,பஜார் வீதி, வவுனியா. (சி-9260)

## கருணாவின் விவகாரத்தை வைத்து

# புலிகள் பலவீனமடைந்துவிட்டதாக தவறாகக் கருதி

# முடிவெடுப்போர் அதன் பலனை அனுபவிப்பார்கள்!

## சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

**கருணாவினுடைய விவகாரத்தை வைத்து தமிழீழ விடுதலைப் புலிகள் பலவீனப்பட்டிருக்கிறார்கள் என்ற தவறான கருத்தைக் கொண்டு முடிவுகளை யாராவது எடுப்பார்களேயானால் அதன் விளைவுகளை அவர்களே அனுபவிப்பார்கள் கடந்த காலங்களிலும் அனுபவித்திருக்கின்றார்கள் என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்தார்.**

தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு பேட்டியளிக்கையில் மேலும் அவர் தெரிவித்ததாவது;

கேள்வி: தற்பொழுது கருணாவின் பிளவிற்குப் பின்பாக விடுதலைப்புலிகளைப் பலவீனப்படுத்த வேண்டும் என்று பல கட்சிகள் முற்பட்டுள்ளதாக ஊடகங்களுடாக அறியக்கூடியதாக இருக்கின்றது. எனவே, தேர்தலின் பின்பு விடுதலைப்புலிகளின் பேச்சுவார்த்தையில் இருக்கின்ற அவர்களின் பலத்தைக் குறைக்கும் நடவடிக்கையாக ஒரு கருவியாக கருணாவைப் பயன்படுத்த மாட்டார்கள் என்று நீங்கள் கருதுகின்றீர்களா?

பதில்: ஒன்றை நான் முதலில் குறிப்பிட வேண்டும். தயவு செய்து நீங்கள் மன்னிக்க வேண்டும். பிளவு என்கின்ற சொல்லைத் தவிர்க்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். இயக்கக் கட்டுப்பாடுகளை மீறிய காரணத்தினால் எங்களுடைய தலைமைப்பீடம் அவருக்கான நடவடிக்கையை எடுத்திருக்கின்றது. அந்த அடிப்படையில் இது பிளவல்ல. கருணா என்கின்ற தனி மனிதனுக்கு எடுக்கப்பட்டிருக்கின்ற ஒரு நடவடிக்கை.

(8ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு அமைச்சு குறித்த சனாதிபதியின் பிடிவாதம் கூடாது

### பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

(லண்டன்)

பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று எங்களுடைய கட்சி மீண்டும் ஆட்சி அமைத்தாலும் சனாதிபதி சந்திரிகா தொடர்ந்தும் பாதுகாப்பு அமைச்சை தான் வைத்திருப்பேன், கையாளுவேன் என்று பிடிவாதம் கொள்ளாமல் தனது கையில் அதனை வழங்க வேண்டும் என பிரதமர் ரணில்விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று பி.பி.சி. தமிழோசைக்கு வழங்கிய பேட்டியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,விடுதலைப்புலிகள் இயக்கத்துக்குள் ஏற்பட்டுள்ள பிளவு இலங்கையின் அமைதி நடவடிக்கையின் பலாபலன்களைப் பாதிக்காது எனவும் விடுதலைப்புலிகளின் தலைவர் அமைதி நடவடிக்கையிலும், அமைதிப் பேச்சுக்களிலும் திடமான

(8ஆம் பக்கம் பார்க்க)

## தவறுசெய்த கருணாவிற்கே ஈ.பி.டி.பி. ஆதரவளிக்குமாம்

### டக்ளஸ் தேவானந்தா கூறுகிறார்

(கொழும்பு)

கருணாவிட்ட தவறால் அவரை அமைப்பிலிருந்து பிரபாகரன் நீக்கியுள்ளார் எனினும் இந்தப் பிரச்சினையில் எமது முழு ஆதரவும் அனுதாபங்களும் கருணாவுக்கே கிடைக்கும் என ஈ.பி.டி.பி. செயலாளர் டக்ளஸ் தேவானந்தா கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் கருணாவைப் பாதுகாத்து அவரது கரங்களை பலப்படுத்த முயல்வோம் பிரபாகரன் மீதான வெறுப்பை கருணாவெளிப் படுத்துவதால் அவரைப் பாதுகாப்போம் இவர்களது பிரச்சினையை எமக்குச் சாதகமாகப் பயன்படுத்த முயல்வோம். இதனால் புலிகளுக்குச் சார்பான வாக்குகள் ஈ.பி.டி.பிக்கு மாறுமெனக் கருதுகிறேன்.

எதிர்வரும் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் 6க்கு மேற்பட்ட ஆசனங்களையும் வன்னி, அம்பாறை, மட்டக்களப்பு, மற்றும் தேசிய பட்டியல்மூலம்10 ஆசனங்

(8ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தமில்லாத சூழலை ஏற்படுத்த சனாதிபதி திடசங்கற்பம் பூண்டுள்ளார்

### திருமலையில் சு.க. பொதுச்செயலாளர் மைத்திரிபாலசிறிசேன

(திருகோணமலை)

அரசியல்வாதிகள் சிலர் யுத்தம் வரவேண்டும் என்று விரும்புகின்றார்கள்.அரசியல்லாபங்களுக்காக அவ்வாறு விரும்புகின்றனர்.நாம் யுத்தத்தை விரும்பவில்லை சமாதானம்தான் இன்று நாட்டுக்குத் தேவைப்படுகிறது யுத்தமில்லாத சூழலை ஏற்படுத்தவே சனாதிபதி திடசங்கற்பம் கொண்டுள்ளார்.

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளரும் மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன நேற்று புதன்கிழமை காலை திருகோணமலை சென்மேரிஸ் பெண்கள் கல்லூரியில் நடைபெற்ற வடக்கு கிழக்கு மாகாண மாணவர்களுக்கான சனாதிபதி மிலேனியம் புலமைப்பரிசில் திட்டத்தின் புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வில் சனாதிபதியின் சிறப்புப்பிரதிநிதியாகக்கலந்து கொண்டு பேசும் போது தெரிவித்தார் சனாதிபதியின் செயலாளர் டபிள்யு.எஸ். கருணாரத்னவும் நிகழ்வில் பங்குபற்றினர். பிரதம விருந்தினராக வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகாஜெயவர்த்தனா பங்குபற்றினார்.

"இந்த நாட்டில் சமாதானத்

(8ஆம் பக்கம் பார்க்க)

## கருணாவின் அடியாட்களால் இரு பொதுமக்கள் கடத்தல்

வந்தாறுமூலையில் கருணாவின் அடியாட்களால் நேற்று இருவர் கடத்தப்பட்டுள்ளனர். வன்னிக்குத் தொலைபேசிமூலம் தகவல் வழங்கினார்கள் என்று குற்றச்சாட்டியே இவ்இருவரும் கடத்தப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வன்னியுடன் தொடர்புகளை வைத்திருக்கக்கூடாதென கருணா குழுவினர் ஏற்கனவே மக்களை மிரட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கிழக்குப் பல்கலை.பீடாதிபதி மீது இனம் தெரியாதோர் துப்பாக்கிச் சூடு

கிழக்குப் பல்கலைக்கழக விவசாய பீடாதிபதி தேவநாயகம் திருச்செல்வம் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார். இந்தச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் மட்டக்களப்பு கல்லாடி என்ற இடத்தில் இடம்பெற்றது மோட்டார் சைக்கிலில் வந்த இருவர் இவரின் இடுப்பில் சுட்டுவிட்டு தப்பிச்சென்றுள்ளனர் பீடாதிபதி தற்சமயம் சிகிச்சை பெற்று வருகிறார். (32)

## அரசியல்துறைப் போராளிகள்; ஈ. பி. டி. பி.யினர் முறுகல்

அரசியல்துறைப் போராளிகளுக்கும், ஈ.பி.டி.பி. தேச விரோதிகளுக்குமிடையே யாழ். வேலணைப் பகுதியில் பெரும் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் அப்பகுதிகளில் பரபரப்பு நிலவுகின்றது.

நேற்று நண்பகல் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது; வேலணையில் உள்ள யாழ். தீவகக் கோட்ட அரசியல்

(8ஆம் பக்கம் பார்க்க)

## நாசவேலை என சந்தேகம்

களனிதிஸ்ஸ அனல் மின்மையத்தில் நேற்று ஏற்பட்ட தீ நாசவேலை காரணமாக இருக்கும் என சந்தேகிக்கப்படுகிறது. இதன் காரணமாகவும் விரைவில் நாட்டில் மின்சாரத் தடை ஏற்படும் என எச்சரிக்கப் பட்டுள்ளது. இதனைத் தவிர்ப்பதற்கு தொழிற்சாலை உரிமையாளர்களும் பாவனையாளர்களும் சிக்கனமாக மின்னைப் பயன்படுத்த வேண்டும் என இங்கு மின்சாரசபை கேட்டுள்ளது.(32)

## இராணுவச் சீருடை துணி பிடிபட்டது

சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட பெருமளவான வன்னிப் பகுதியில் பயன்படுத்தப்படும் இராணுவ உடை துணிகள் ஊறுகெடவத்தை களஞ்சியத்தில் வைத்து கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த இராணுவ உடைகளுக்கான துணிகள் கடந்த 15ஆம் திகதி மலேசியாவில் இருந்து கப்பல் மூலமாக கொழும்பு துறைமுகத்துக்குக் கொண்டுவரப்பட்டது. சுமார் ஒரு இலட்சத்து 20 ஆயி

(8ஆம் பக்கம் பார்க்க)

## -வடமராட்சிக் கடற்பரப்பில்- உள்ளூர் மீனவர்கள் மீது நேற்று இந்திய மீனவர்கள் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ். வடமராட்சிக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்த இந்திய மீனவர்கள் மேற்கொண்ட காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களால் வடமராட்சி மீனவர்களுக்குப் பெரும் இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

நேற்று அதிகாலை திடீரென அத்துமீறி நுழைந்த இவர்கள் அங்கு தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வடமராட்சி மீனவர்களை விரட்டியடித்துக் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். இதனால், வடமராட்சி மீனவர்கள் தொழிலுக்குச் செல்ல அச்சம் தெரிவிக்

(8ஆம் பக்கம் பார்க்க)

## -யாழ். மாவட்டத்தில்- கூட்டமைப்புக்கு ஆதரவாக ஆசிரியர் சங்கம் தீவிர பிரச்சாரம்

தமிழ்தேசியக் கூட்டமைப்பினருக்கு ஆதரவாக இலங்கைத் தமிழர்ஆசிரியர் சங்கத்தினர் நேரடியான பிரச்சார நடவடிக்கைகளில் நேற்று முதல் தீவிரமாக ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

சுயநிர்ணய உரிமையுடனான கூட்டாட்சி என்ற அடிப்படையில் தமிழ் மக்களுடைய ஏகபிரதிநிதிகளான விடுதலைப் புலிகளுடன் பேசி, தமிழர் தரப்பின் நீண்டகால பிரச்சினைக்கான அரசியல் தீர்வுகள் முன்வைக்கப்பட வேண்டுமென இலங்

(8ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**காணவில்லை**

15/03/2004இல் இருந்து வெள்ளை எருது **S.J** செங்காரி எருது **N-M** என்ற குறியுடைய உழவு மாடுகள் (பிணைத்தபடி) உருத்திரபுரத்தால் மேச்சலுக்கு சென்றவைகள் காணவில்லை. எங்கேனும் கண்டவர்கள் வ.சிவா No-20,D10 உருத்திரபுரம் என்னும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (4334)

**இசைமதி ஒலிப்பதிவகம்**

கனகபுரம் என்னும் முகவரியில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த இலத்திரனியல் உபகரணங்கள் தற்போது அதன் உரிமையாளர் சிறிதரன் என்பவரின் வீட்டு முகவரியான, இல1145, திருநகர் தெற்கு, திருநகர் முகவரியில் வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் வாடிக்கையாளர்கள் இம்முகவரியுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். உரிமையாளர், சிறிதரன் (4343)


# பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து திருமலை விவசாயிகள் போராட்டம்

(திருகோணமலை)

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து திருமலையில் விவசாயிகள் நேற்று பிரதேச செயலகம் முன் மறியற்போராட்டம் நடத்தினர்.

சாம்பல்தீவு, வரோதயநகர், கன்னியா, ஆண்டாங்குளம், சாரதாபுரம், கப்பல்துறை ஆகிய இடங்களைச் சேர்ந்த நூற்றுக்கு அதிகமான விவசாயிகள் நேற்றுக் காலை திருகோணமலை பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு முன்பாக சுலோக அட்டைகளைத்தாங்கிய வண்ணம் மறியற்போராட்டம் ஒன்றை நடத்தினார்கள்.

"அம்பறை, பொலன்நறுவ, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் வழங்கப்படும் வரட்சி நிவாரணம் திருகோணமலை மாவட்ட விவசாயிகளுக்கும் வழங்கப்படவேண்டும், நீர்ப்பாசனக்குளங்கள் புனரமைக்கப்படவேண்டும், விவசாய உற்பத்தி பொருட்களுக்கு சந்தை வாய்ப்பு ஏற்படுத்தித் தரவேண்டும், விவசாய செய்கைக்கான பொருள்களின் விலைகள் அதிகரிகப்பதைக் கட்டுப்படுத்தவேண்டும்" ஆகியகோரிக்கைகளை முன்வைத்து இம்மறியல் போராட்டம் நடத்தப்பட்டதாக இதனை ஒழுங்கு செய்தவர்கள் தெரிவித்தனர்.

விவசாயிகள் சார்பில் பிரதேச செயலாளரிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது. கப்பல்துறை விவசாய சம்மேளனத் தினால் கையளிக்கப்பட்ட மகஜரில் தெரிவிக்கப்பட்ட ஏனைய கோரிக்கைகளில் யானைகளினால் ஆயிரம் தென்னை மரங்கள் அழிக்கப்பட்டுள்ளன அவற்றிற்கு நட்டஈடு பெற்றுத்தர வேண்டும் என்பதும் ஒன்றாகும். திருகோணமலை பிரதேச செயலாளர் சுதந்தரம், அருமைநாயகம், அரச அதிபருடன் பேசி குறைகளை நீக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக மறியலில் ஈடுபட்ட விவசாயிகளுக்கும் தெரிவித்தார் விரைவில் தீர்வு கிடைக்காத பட்சத்தில் திருமலை மாவட்ட விவசாயிகள் அனைவரும் ஒன்றிணைந்து திருமலை முற்றவெளியில் பொதுக்கூட்டம் நடத்தி உண்ணா விரதத்திலும் ஈடுபடுவார்கள் என்று போராட்டம் நடத்தியோர் தெரிவித்தனர். (25)

# ஊர்வலமாகச் சென்று வவு.வில் கூட்டமைப்பினர் ஆதரவு கோரல்

(செட்டிகுளம்)

வன்னித் தேர்தல் தொகுதியின் வேட்பாளர்கள் வவுனியா நகரில் கடைகடையாகவும் வீதிகளில் இறங்கியும் பிரச்சார நடவடிக்கையில் ஈடுபட்டனர். வேட்பாளர்கள் அனைவரும் மகாவித்தியாலய முன்றலில் இருந்து ஊர்வலமாக வீதிநாடக கலைஞர்கள் கோசமிட்டு முன் செல்ல வேட்பாளர்கள் பின் நகருக்குச் சென்று வீட்டு சின்னத் திற்கும் வாக்குச்சேகரிப்பதில் ஈடுபட்டனர். (21)


## துயர் பகிர்கின்றோம்

### திருமதி நாகம்மா வைரமுத்து

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் இயக்குனர்சபை உறுப்பினரும், உருத்திரபுரம் வடக்கு கிராம அலுவலருமான திரு.வைரமுத்து வைத்தீஸ்வரமூர்த்தி அவர்களின் அன்புத்தாயார் திருமதி நாகம்மா வைரமுத்து அவர்கள் 2004-03-15 அன்று காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்ளுகின்றோம்.

இயக்குனர்சபையினர்,
இணைப்பாளர்,
பணியாளர்கள், சிறார்கள்,
காந்தி சேவாசங்கம்
உருத்திரபுரம்.

(4340)

## துயர் பகிர்கின்றோம்

### திருமதி நாகம்மா வைரமுத்து

கரைச்சிப் பிரதேச செயலக நலன்புரிச்சங்க உறுப்பினரும், உருத்திரபுரம் வடக்கு கிராம அலுவலருமான திரு.வைரமுத்து வைத்தீஸ்வரமூர்த்தி அவர்களின் அன்புத் தாயார் திருமதி நாகம்மா வைரமுத்து அவர்கள் 2004.03.15 அன்று காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம், ஊழியர் நலன்புரிச் சங்கம்.
கரைச்சி.

(4339)


## கோட்டமட்ட போட்டிகள்

கரைதுரைப்பற்று கோட்டமட்டத்தில் கடந்த 22,23 ஆகிய நாட்களில் வித்தியானந்தாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற மென்பந்து போட்டியில முதலாம் இடத்தை 65 புள்ளிகளைப்பெற்று முள்ளியவளை வித்தியானந்தாக்கல்லூரியும் இரண்டாம் இடத்தை 63 புள்ளிகளைப் பெற்று முல்லைத்தீவு மகாவித்தியாலயமும் பெற்றுக் கொண்டன.

எல்லே பெண்களுக்கான போட்டியில் முதலாம் இடத்தை முல்லைத்தீவு மகாவித்தியாலயமும், இரண்டாம் இடத்தை செம்மலை மகா வித்தியாலமும், ஆண்களுக்கான எல்லேப் போட்டியில் முதலாம் இடத்தை முல்லைத்தீவு மகாவித்தியாலயமும், இரண்டாம் இடத்தினை முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)


## 7ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும், வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களை வதிவிடமாகவும் கொண்ட வைத்திய கலாநிதி உயர்திரு.

**அமரர்**
**கணபதிப்பிள்ளை சின்னத்தம்பி**

மலர்வு: 22-01-1913
உதிர்வு: 25-03-1997

திதி:07-03-2004

வித்தையெல்லாம் விருப்புடனே விதந்துரைத்தாய்
விழிப்புடனே உயர்வுபெற வழிவகுத்தாய்
எண்ணற்ற மாந்தர்களின் பிணி அகற்றி
வையகத்தில் வாழ்வாங்கு வாழ வைத்தாய்

பொய்யாகிப் போய்விடாதா உம்மறைவு
பெருகுதையா நெஞ்சமெலாம் உம் நினைவு
ஐயாவும் பிரிவுதனை நாம் நினைந்து
உருகுகிறோம் விழிகளிலே நீர் நிறைந்து.

ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

சி. பேரம்பலம்,
ஆயுர்வேத வைத்தியர்,
சில்வா வீதி, வட்டக்கச்சி.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(4341)

## கிளிநொச்சி மாவட்ட சிறுபோக பயிர்ச்செய்கைக் கூட்டம் -2004

### அக்கராயன்குளம், வன்னேரிக்குளம்

1951ம் ஆண்டின் முதலாம் இலக்க சட்டத்தாலும், 1968ம் ஆண்டின் 48ம் இலக்க சட்டத்தாலும் திருத்தப்பட்ட 1940ம் ஆண்டின் 32ம் இலக்க நீர்பாசனக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் 2004ம் ஆண்டிற்கான அக்கராயான்குளம், வன்னேரிக்குளம் ஆகிய குளங்களுக்கான சிறுபோக பயிர்ச்செய்கை கூட்டங்களைத் தனித்தனியாக கூடி முடிவுசெய்ய முடியாத சூழ்நிலையுள்ளதால் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ஆகிய திருநாவுக்கரசு இராசநாயகம் ஆகிய நான் எனக்களிக்கப்பட்ட விசேட அதிகாரத்தின் மூலம் 2004.03.25ம் திகதி அன்று பின்வரும் பயிர்ச்செய்கை அட்டவணையை இத்தால் பிரகடனப் படுத்துகின்றேன்.

**01.கால அட்டவணை**

| விபரம் | அக்கராயன் குளம் | வன்னேரிக்குளம் |
|---|---|---|
| விதைக்கும் விஸ்தீரணம் | 1350 ஏக்கர் | 105 ஏக்கர் |
| விதைக்கும் நெல்லினம் | 3-3½ மாதம் | 3-3½ மாதம் |
| ஆரம்ப நீர் விநியோகம் | 10.04.2004 | 10.04.2004 |
| முதல் விதைப்புத் திகதி | 15.04.2004 | 15.04.2004 |
| இறுதி விதைப்புத் திகதி | 10.05.2004 | 30.04.2004 |
| இறுதி நீர் விநியோகம் | 10.08.2004 | 30..07.2004 |
| வாய்க்கால் துப்புரவு செய்தல் (இறுதித்திகதி) | 08.04.2004 | 08.04.2004 |

02.வாய்க்கால் துப்புரவு செய்யாதவர்களுக்கு தண்டம் பாகத்திற்கு 100/=
03.மேலதிக விதைப்புக்கு தண்டம் ஏக்கருக்கு 5000/=
04.கால்நடை கட்டுப்பாடு, 15.04.2004-30.09.2004 வரை
05 பங்கு ஒதுக்கீடு பற்றிய விபரங்கள் திட்டக்குழுக்களுக்கு செயலகத்தால் அறிவிக்கப்படும்.

தி.இராசநாயகம்,
அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(தி-9430)

## UNITED NATIONS WORLD FOOD PROGRAMME KILINOCHCHI

### VACANCY FOR A CONSTRUCTION MANAGER

*Tha world Food Programme is the Food Aid Agency of the United Nations System and has been in operation in Srilanka since 1968with a multiple-fold mission to provide Food-for-Life, Food-for-Growth,Food-for-Education, Food-for-Peaceful Resettlement and Food-for Work.*

*The WFP is in the process of constructing its own office complex in the land allocated to WFP in Kilinochchi.*

*WFP seeks a qualified, energetic, and experienced Civil Engineer or Senior Technical Officer with a minimum of 10 years experience in the building construction field.*

- Fluency in English and Tamil is essential.
- Should have basic knowledge in computer applications.
- The duration of the post will be for 6 months.
- The selected candidate will be paid a remuneration of Rs.20:000 per month (all inclusive)
- Qualified candidates from the Vanni will be preferred.
- Qualified candidates are invidte to submit their applications together with copies of testimonials under registered cover to the below mentioned address on or before 10th April 2004

Head of Field Office,
C/o Construction Supervisor Recruitment,
World Food Programme,
142, Kandy Road,
Kilinochchi.

(4243)

# ஹமாஸ் இயக்கத்தின் புதிய தலைவர் தெரிவு பதிலடிக்கு அணிதிரள பலஸ்தீனருக்கு அழைப்பு

## இஸ்ரேலில் அதி உயர் விழிப்பு நிலை


**ஹமாஸ் இயக்கத்தின் புதிய தலைவராக அப்துல் அஸீஸ் அல்ரொன்டிஷி நேற்று முன்தினம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் இஸ்ரேலுக்கு பதிலடி கொடுக்கப் படுமென எச்சரித்துள்ளார்.**

இவர் காசாவில் மக்கள் மத்தியில் உரையாற்றுகையில் ஸ்ரேலியர்களுக்குப் பதிலடி கொடுக்க அனைவரும் ஒன்றாக அணிதிரள வேண்டுமெனக் கோரியுள்ளார்.


இதேவேளை இஸ்ரேல் ஹமாஸ் இயக்கத்தின் தாக்குதல்களை எதிர்பார்த்து அதன் பாதுகாப்புப் படைகளை அதி உயர் உசார் நிலையில் வைத்துள்ளது. அத்துடன் மேற்குக்கரை எல்லைப் பகுதி மூடப்பட்டுள்ளதுடன் பாதுகாப்பு சோதனைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இஸ்ரேலிய டாங்கிகள் பலஸ்தீன எல்லைகள் மீது தாக்குதல்களை நடாத்துவதற்கு தயார் நிலையில் இருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஹமாஸ் இயக்கத்தின் தலைவர் ஷேக்அகமத் ஜஷீன் கடந்த திங்கட்கிழமை இஸ்ரேலிய ரொக்கற்தாக்குதலில் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை ஹமாஸ் இயக்கத் தலைவர் கொலைக்கான பதிலடியைப் பெற அமெரிக்காவும் அதன் தோழமை நாடுகளும் தயாராகியிருக்க வேண்டுமென ஹமாஸ் போராளிகள் சூளுரைத்துள்ளனர்.

ஷேக்அகமத் ஜஷீன் கொல்லப்பட்டமையை ஐரோப்பிய ஒன்றியமும் வேறுபல நாடுகளும் கண்டித்துள்ளன. இதேவேளை பலஸ்தின தீவிரவாதத் தலைவர்கள் தொடர்ந்தும் கொல்லப்படுவார்கள் என நேற்று முன்தினம் இஸ்ரேல் எச்சரிக்கை விடுத்துள்ளது.



பிலடெல்பியா என்ற இடத்திலுள்ள 33வருட பழைமை வாய்ந்த கட்டடம் பில்லிஸ் ஈகின்ஸ் நிறுவனங்கள் பூங்கா அமைக்கும் முகமாக உடைக்கப்படுகின்றது.



ஹமாஸ் தலைவரின் மறைவையொட்டி மூன்றுநாட்கள் துக்கதினம் அனுஷ்டிக்கப்படும் வேளை காசாநகருக்கு வருகைதந்திருக்கும் பலஸ்தீனப் பிரதமர் அகமட்கியூரியா, ஹமாஸ் அமைப்பின் சிரேஷ்ட தலைவர் மகமுட்சகார் (மத்தி) மற்றும் யசீர் அரபாத்தின் உதவியாளர்தயப்அப்துல்ரஹீம்.



ஹமாஸ் இயக்கத்தின் ஸ்தாபகரும் தலைவருமான ஷேக்அகமட்ஜஷீன் இஸ்ரேலிய தாக்குதலில் பலியானதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக கர்பலாநகரில் இஸ்ரேலியக் கொடியை எரிக்கும் ஈராக்கியர்.

# பேரழிவு ஆயுதங்களை அழித்தொழிக்கும் திட்டத்தில் லிபிய சனாதிபதி கைச்சாத்து

## உறவை வலுவாக்க அமெரிக்கா ஆலோசனை

பேரழிவு ஆயுதங்களை அழித்தொழிக்கும் திட்டத்தில் லிபியாவின் சனாதிபதி முகமட் கடாபி நேற்று முன்தினம் கையெழுத்திட்டுள்ளார்.

இச்செயற்பாடு லிபியாவிற்கும் அமெரிக்காவிற்குமிடையேயான உறவுகளை மேலும் வலுப்படுத்தும் நடவடிக்கையென அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதனை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக இரண்டு நாடுகளும் உயர் மட்ட சந்திப்பொன்றை நடத்துவதற்கும் அமெரிக்கா ஆலோசனை தெரிவித்துள்ளது. லிபியா தன்னிடமுள்ள பேரழிவு ஆயுதங்களைக் கைவிடுவதாக அறிவித்ததையடுத்து அங்கு ஆயுத பரிசோதகர் குழு சென்று அவ்வாறான ஆயுதங்களைப் பார்வையிட்டதுடன் ஒரு தொகுதி ஆயுதங்களையும் அமெரிக்காவிற்கு எடுத்துச்சென்றிருந்தது.

மேலும் இதனால் அமெரிக்காவுக்கும் லிபியாவுக்கும் இடையிலான உறவும் படிப்படியாக மேம்பாடடைந்து வந்தது. தற்போதைய நிகழ்வுகள் உறவை மேலும் சுமுகமாக்கும் வகையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இஸ்ரேலிய தூதரகம் முன் பலஸ்தீனர்கள் ஆர்ப்பாட்டம்

அமெரிக்காவின் நியூயோர்க் நகரிலுள்ள இஸ்ரேலியத் தூதரகம் முன்பாக பலஸ்தீனர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பலஸ்தீனக் கொடிகளை ஏற்றி ஆர்ப்பாட்டம் செய்த மக்கள் இஸ்ரேலையும், அமெரிக்காவை எதிர்த்து கோஷமிட்டனர். இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோனையும், அமெரிக்க சனாதிபதிஜோர்ஜ் டபிள்யூ புஷ்சையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் வன்மையாகக் கண்டித்தனர்.

ஹமாஸ் இயக்கத்தின் தலைவர் இஸ்ரேலால் படுகொலை செய்யப்பட்டதையடுத்து உலகின் பல் வேறுபகுதிகளில் முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்திவருகின்றமை தெரிந்ததே.

# மக்கள் பிரச்சினை குறித்து பொதுவிவாதம்; தமிழக முதல்வருக்கு கலைஞர் அழைப்பு

(சென்னை)

மக்கள் பிரச்சினைகள் குறித்து தம்முடன் பொதுமேடையில் விவாதிக்க அ.இ.அ.தி.மு.க.பொதுச் செயலர் முன் வருவாரா என்று தி.மு.க. தலைவர் மு.கருணாநிதிகேட்டுள்ளார்.

திருவண்ணாமலையில் நேற்று முன்தினம் பொதுக் கூட்டமொன்றில் கருணாநிதி உரையாற்றும்போதே, நாட்டில் நிலவி வரும் அதிகளவிலான பிரச்சினைகள் பல. ஆனால் மக்கள் பிரச்சினை எதுவுமே தமிழ் நாட்டில் இல்லை என்றும் கூறும் அ-இ-அ-தி.மு.க. பொதுச் செயலர் ஜெயலலிதாஇதுபற்றி பொது மேடையில் விரிவாக விவாதிக்கத் தயாரா என்று வினா எழுப்பியுள்ளார். மக்கள் பிரச்சினைகளான பங்கீட்டு உணவு அட்டை அரிசி தண்ணீர் பிரச்சினை போன்ற வற்றை தமது கட்சி சுட்டிக்காட்டினால், அதற்குப்பதிலாகராஜீவ்காந்தி கொலை வழக்கு என்று ஜெயலலிதா அரசு மக்களை திசைதிருப்புவதா என்று குற்றம் சாட்டியுள்ளார். மகளிர் சுயஉதவிக்குழுவினரை தேர்தலுக்கும் அரசியலுக்கும் ஜெயலலிதா பயன்படுத்தி வருவதாகக் கூறிய அவர் தி.மு.க, காங்கிரஸ் பா.ம.க.கம்யூனிஸ்ட் கட்சிகளை உள்ளடக்கிய கூட்டணியே வெற்றிக்கூட்டணி என்றும் கூறியுள்ளார்.



தாய்பேய் நகரில் தாய்லாந்து தேசியக் கொடியை ஏந்தி ஆர்ப்பாட்டம் நடத்தும் பிரதான எதிர்க்கட்சி ஆதரவாளர்கள்.

# உலக வர்த்தக மைய செப்-11 தாக்குதல்; வாஷிங்டனில் விசாரணைகள் ஆரம்பம்

## -கிளிங்டன், புஷ் மீது கண்டனம்

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் உலக வர்த்தக மையம் தீவிரவாதிகளினால் செப்ரெம்பர் 11 தாக்கப்பட்ட சம்பவம் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நியூயோர்க் நகரில் 2001 செப்ரெம்பர் 11ஆம் திகதி உலக வர்த்தகமையம் அல்-ஹைதா தீவிரவாதிகளினால் தகர்க்கப்பட்டது.

இந்தத் தகர்ப்பு தொடர்பாக ஆராய்வதற்கென்று நியமிக்கப்பட்ட குழு, வாஷிங்டனில் நேற்று முன்தினம் தமது விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இதில் அமெரிக்க வெளியுறவுச் செயலர் கொலின்பவல், இராஜாங்கச் செயலர் றிச்சர்ட் ஆர்மிரேஜ் ஆகியோர் முக்கிய சாட்சியளித்தார்கள்.

முதற் கட்டவிசாரணையின் போது அமெரிக்க முன்னாள் சனாதிபதி பில்கிளிங்டன், தற்போதைய சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் ஆகியோரது அரசாங்கம், ஒஸாமா பின் லேடனினதும் அவரது சகாக்களினதும் தீவிரவாத நடவடிக்கைகளை ஒடுக்கத் தவறியதாக கொலின்பவல், ஆர்மிரேஜ் இருவரும் குறை கூறியுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# இனவாத தாக்குதல்களைத் தடுக்க சர்வசன வாக்கெடுப்பிற்கு பரிந்துரை!

வெனிசுவெலாவில் இனவாதத் தாக்குதல்களுக்கு எதிராக பொதுவான சர்வசன வாக்கெடுப்பொன்றை நடத்துமாறு அரசாங்கத்திடம் நீதிமன்றம் கேட்டுள்ளது.

நாட்டில் தொடர்கின்ற இனவாத நோக்கம் கொண்டகுழுக்களின் ஆதிக்கத்தினால் அரசாங்கம் வலுவிழந்து வருகின்றதெனவும் அதனைத் தடுக்கும் வகையில் எமக்கு அதிகாரத்தை வழங்குமாறு நீதிமன்றத்திடம் அரசாங்கம் கேட்டிருந்தது. இதுதொடர்பாக ஆராய்ந்த நீதிமன்றம் தீர்வை வெனிசுவெலா பிரஜைகளே வழங்கவேண்டுமெனவும் ஆகையால் கருத்துக்கணிப் பிற்குச் செல்லுமாறு ஆலோசனை வழங்கியுள்ளது.

# பயிர்ச்செய்கையில் வளம்பெற

# தூவல் நீர்ப்பாசனம்





குறைந்த நீர்ப்பாசனத்துடன் கூடிய நிலப்பரப்பில் பயிர்செய்கையினை மேற்கொள்ளும் வகையில் விவசாயத் திணைக்களத்தினரின் அனுசரணையுடன் தற்போது தூவல் நீர்ப்பாசன பயிர்ச்செய்கைமுறை நெடுங்கேணிப் பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதன் மூலமாக நீர்வளம் குறைந்த பகுதிகளில் மேட்டு நிலப்பயிர்ச செய்கையினை குறைந்த நீர்ப்பாசனத்துடன் மேற்கொள்வதற்கு இத் தூவல் நீர்ப்பாசனத்திட்டம் வழிசமைத்துள்ளது.

மேற்படி திட்டத்தின் மூலம் நெடுங்கேணி ஒலுமடுக்கிராமத்தில் வெங்காயம், மற்றும் கறிமிளகாய்ச் செய்கையினை விவசாயி ஒருவர் மேற்கொண்டு வருவதுடன், பெரும் பலனையும் பெற்று வருகின்றார்.



தூவல்பாசனத்திற்குத் தயார்படுத்தப்பட்டுள்ள கறிமிளகாய் செடிகள்

இத்தூவல் நீர்ப்பாசன முறையினை வன்னிப் பெருநிலப்பரப்பிலுள்ள சகல விவசாயிகளும் கைக்கொண்டு அதிக பயனைப் பெற்றுக்கொள்ள வழிசமைக்கும் வகையில் கிளி, முல்லை, மன்னார் மாவட்ட விவசாயிகளுக்கு இச் செய்கைமுறையினைக் கடந்த வாரம் நேரில் பார்வையிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பெற்றது.

இந்த வகையில் கிளிநொச்சி வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவனத்தினரின் ஏற்பாட்டின் பிரகாரம் கிளி, முல்லை, மன்னார் மாவட்டங்களிலிருந்து 40 ற்கும் மேற்பட்ட விவசாயிகள் நெடுங்கேணி ஒலுமடுப் பகுதிக்கு நேரில் அழைத்துச் செல்லப் பெற்று பயிர்ச் செய்கையினைக் காண்பித்ததுடன் இந் நீர்ப்பாசனத்திட்டநடைமுறைகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

முதலாவதாக இத் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப் பெற்று வரும் வெங்காய பயிர்ச்செய்கையினைக் காண்பித்து தூவல் நீர்ப்பாசனம் மூலம் நீர்ப்பாய்ச்சல் முறையினையும் செய்வித்து காண்பிக்கப்பெற்றது.

அடுத்து மிளகாய் செய்முறையும் காண்பிக்கப்பெற்றது.

இதனையடுத்து முல்லை மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் இ. கோகுலதாசன் விவசாயிகளுக்கு விளக்கமளிக்கையில்,

தூவல் நீர்ப்பாசன முறைமூலம் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் பொழுது குறைந்த நீர் வளத்துடன் சிறந்த முறையில் கூடிய நிலப் பரப்புடன் மிகக் குறைந்த செலவில் பயிர்ச்செய்கையினை மேற்கொள்ள முடியும்.

குறிப்பாக இத்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு குறிப்பிட்ட மூலதனம் ஆரம்பத்தில் தேவைப்படுவதுடன் இதனுடைய தொழில்நுட்பத்தினையும் செய்கையாளர் அறிந்திருத்தல் அவசியம் குறிப்பாக இத்திட்டத்தின் மூலம் குடும்ப அங்கத்தவர்களுடனேயே தனித்து ஒரு குறிக்கப்பட்ட அளவு பயிர்ச் செய்கையினை ஒரு விவசாயினால் மேற்கொள்ள முடியும்.

உதாரணமாக வெங்காயப் பயிர்ச்



தூவல் பாசனமுறை

செய்கையினை எடுத்துக்கொண்டால் இத்தூவல் நீர்ப்பாசனம மூலம் இச்செய்கையினை மேற்கொள்ளுமிடத்து சிறந்த பலனை பெறக் கூடியதாகவுள்ளது.

மற்றைய வாய்க்கால்முறை நீர்ப்பாசனத்திற்கு தேவைப்படும் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்படும் இப்பயிர்ச்செய்கையினை குறைந்த ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பிலேயே செய்கை பண்ணக்கூடியதாகவுள்ளதுடன் நோய்த்தாக்கங்களிலிருந்தும் பெருமளவில் விடுபடக் கூடிய ஏதுநிலையும் ஏற்படுகின்றது. ஒரு குறிப்பிட்ட நேரத்தில் குறைந்தளவு நீரினைக் கொண்டு சமமான முறையில் பயிர்களுக்கு நீர்ப்பாசனத்தினை மேற்கொள்ள முடிகிறது.

அத்துடன் பனிக்காலத்தில் வெங்காயச் செய்கையில் குறிப்பாக வெங்காயத்தண்டு நுனியில் ஏற்படுகின்ற தாவரப்பங்கசு தாக்கம் என்பது தூவல் நீர்ப்பாசனத்தின் மூலம் அகற்றப்பட்டு விடுகின்றது. நோய்ப்பீடைத் தாக்கம் என்பது மிகக் குறைவென்றே கூறமுடியும்.

மற்றும் சமமாக சகல பயிர்களுக்கும் நீரினைப்பாய்ச்ச முடிவதுடன் பெரும் விளைச்சலினையும் பெறக்கூடியதாக அமைகின்றது. அத்துடன் நீர்வளம் அருகிக் காணப்படும் பகுதிகளில் இத் திட்டத்தின் மூலம் மேட்டு நிலப்பயிர்ச் செய்கையினை மேற்கொள்ளக் கூடிய ஏதுநிலை உருவாகியுள்ளது.

அடுத்து மேற்படி திட்டத்தின் மூலம் பயிர்ச்செய்கையினை மேற்கொண்டுவரும் ஒலுமடு நெடுங்

**கனகபுரச்சோதி**

கேணியைச் சேர்ந்த சூரியகுமார் (வயது 33) என்பவரிடம் இத்திட்டத்தின் மூலம் கிடைக்கப் பெற்று வரும் பலன்கள் குறித்து கேட்டபோது தெரிவிக்கையில்,

விவசாயத் திணைக்களத்தினரின் அனுசரணையுடன் தூவல் நீர்ப்பாசனத்தின் மூலம் கடந்த 2 1/2 வருடங்களாக வெங்காயப் பயிர்ச்செய்கையினை மேற்கொண்டு வருகின்றேன். ஆரம்பத்தில் இத்திட்டத்திற்கு 33,000 ரூபா தேவைப்பட்டது. இத்திட்டத்திற்கு பயன்படுத்தப்படும் குழாய்கள் குறித்த விளக்கத்தினை முதலில் நிறுவனத்தினர் தெரிவித்திருந்தனர். அதன் பிரகாரம் குறிப்பிட்ட நிலப் பரப்பினுள் வெங்காயப் பயிர்ச் செய்கையினை மேற்கொண்டு வருகின்றேன். தற்போது 1/4 ஏக்கருக்கு சற்றுக் கூடுதலான நிலப்பரப்பில் வெங்காயச் செய்கையினை தூவல் நீர்ப்பாசனம் மூலம் மேற்கொண்டுள்ளேன். ஆரம்பத்தில் நடுகைக்கென 75 கிலோ வெங்காயத்தினைப் பயன்படுத்தியுள்ளேன். விளைச்சல் அறுவடையின் போது 30 அல்லது 34 அந்தர் வெங்காயத்தினைப் பெறக் கூடியதாக அமைந்துள்ளது.

குறிப்பாக இத்திட்டத்தின் மூலம் வெங்காயச் செய்கையிலீடுபட்டது முதல் அறுவடைவரை இந்த இருமாத கால இடைவெளியில் குறைந்தது 7500 ரூபா வரையில் செலவாகியுள்ளது. குறிப்பாக இத்திட்டத்தினூடாக மேற்கொள்ளப் பெற்ற வெங்காயப் பயிர்ச்செய்கையில் இரண்டு மாதத்தில் மட்டும் 20,000 ரூபா மேல் தேறிய ஆதாயத்தினைப் பெற முடியும் எனத் தெரிவித்ததுடன்,

தூவல் நீர்ப்பாசனம் மூலமாக கறிமிளகாய்ச் செய்கையினையும் மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இது குறித்து கிளி. மாவட்ட விவசாயிகள் சம்மேளனத் தலைவர் மனோகரன் கருத்துத் தெரிவிக்கையில், தூவல் நீர்ப்பாசனத்திட்டத்தின் மூலம் நேரில் பார்வையிட்டு அதன் செயற்றிட்டங்களை அறிவதற்கும் மற்றும் விவசாயிகள் சிறந்த விவசாய செய்கையினை மேற்கொள்வதற்கு ஒத்தாசை நல்கிவரும் கிளி.மாவட்ட வேளாண் நிறுவனத்திற்கு கலந்துகொண்ட விவசாயிகள் சார்பாக நன்றியைத் தெரிவிப்பதுடன் இச்செய்கைமுறை மேலும் அறிமுகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் இதன் மூலமாக சகல விவசாயிகளும் சிறந்த பலாபலன்களைப் பெற்றுக்கொள்ள வழிசமைக்குமெனவும் தெரிவித்தார்.

---

# கணித, விஞ்ஞான ஆசிரியர்களுக்கு ஜப்பானிய புலமைப் பரிசில் திட்டம்

(கொழும்பு)

அரசாங்கப் பாடசாலைகளில் கற்பிக்கும் கணித, விஞ்ஞான ஆசிரியர்கள் ஜப்பானிய நகுட்டோ பல்கலைக்கழகத்தில் முதுமானிப்பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கு புலமைப் பரிசில் திட்டமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

மனிதவள அபிவிருத்தி, கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் அனுசரணையுடன் சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பானிய முகவர் நிலையம் இத்திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளது.

கற்பித்தலில் மூன்று வருட அனுபவம் கொண்ட 35 வயதுக்குட்பட்ட ஆசிரியர்கள்,சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோர் இதற்கு விண்ணப்பிக்க முடியும் என்று கல்வியமைச்சு கூறியுள்ளது. ஏப்ரல் 15 ஆம் திகதிக்கு முன்னர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஊடாக சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பானிய முகவர் நிலையம், கொழும்பு-7 எனும் முகவரிக்கு அனுப்புமாறு கல்வியமைச்சு கூறியுள்ளது.

## 29 மாணவர் சித்தி

முல்லை மாவட்ட அரசாங்க அதிபரின் அனுசரணையுடன் மனிதவள அபிவிருத்திப் பிரிவினரால் 2003 ஆம் ஆண்டின் 2ஆம் பிரிவுக்கான இலவசக் கணினி கற்கை நெறியில் 29 மாணவர் அதிவிசேட, விசேட சித்திகளைப் பெற்றுள்ளனர்.

இப்பயிற்சியில் 19 அதி விசேட சித்தியும் (Dதரம்) 10 திறமைச் சித்தியும் (Cதரம்) தேறியுள்ளனர். இக்கணினிப் பயிற்சி புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்று வந்தது. (20)

---

# 50ஆயிரம் இராணுவத்தினர் தப்பியோட்டம் அரசியல்வாதிகளுடன் இருந்த 179 பேர் கைது!

## -இராணுவப் பேச்சாளர் தகவல்

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்திலிருந்து இதுவரை ஐம்பதாயிரம் பேர் தப்பியோடியுள்ளனர் என இராணுவப் பேச்சாளர் கேணல் சுமேத பெரேரா தெரிவித்துள்ளார்.

மேலும் இராணுவத்திலிருந்து தப்பியோடி அரசியல்வாதிகளால் தேர்தல் வன்முறைகளிலும், தேர்தல் நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்தப்பட்டிருந்த 179 படையினர் உட்பட 428 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.இதனை பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜெயந்த விக்கிரம ரட்ண கூறியுள்ளார்.

தென்மாகாணம் 39 பேர், வடமத்திய மாகாணம் 33 பேர், மேல் மாகாணம் 30 பேர், கிழக்கு மத்திய மாகாணம் 276 பேர், மத்திய மேற்கு மாகாணம் 27 பேர், சப்பிரகமுவ மாகாணம் 03பேர், வடமேற்கு மாகாணம் 09 பேர், ஊவா மாகாணம் 02 பேர், மத்திய மாகாணம் 09 பேர். இதுவரை கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இது தொடர்பாக மேலும் கருத்துக் கூறிய இராணுவ பேச்சாளர் கேணல் சுமேத பெரேரா, இதுவரை 50 ஆயிரம் பேர் இராணுவத்தைவிட்டுத் தப்பி ஓடியுள்ளார்கள் என்று கூறியுள்ளார்.

# 24 மணித்தியாலங்களில் 49 தேர்தல் வன்முறைகள்

நேற்றுக் காலை ஆறு மணியுடன் முடிவடைந்த, 24 மணித்தியாலத்தில் தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக 49 முறைப் பாடுகள் கிடைத்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட தினத்திலிருந்து இன்று வரை 860 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகள் கிடைத்துள்ளது என்றும் இவற்றில் 685 குற்றவியல் சட்டத்தை மீறியவை எனவும் ஏனையவை தேர்தல் சட்டத்தை மீறியவை என்றும் கூறப்படுகின்றது.

# கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்த கிளிநொச்சியில் விசேட கலந்துரையாடல்

## 2003ல் 895பேர் விசர்நாய் கடிக்குச் சிகிச்சை

(அலுவலக செய்தியாளர்)

**அண்மைக் காலமாக வன்னிப் பெருநிலப்பரப்பில் அதிகரித்துள்ள கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் நடைபெற்றது.**

தமிழீழ சுகாதார சேவையினரின் ஒழுங்குபடுத்தலில் நேற்று முன்தினம் பிற்பகல் இரண்டு மணிக்கு தமிழீழ நிர்வாக சேவையின் கிளி. மாவட்ட செயலக மண்டபத்தில் தமிழீழ சுகாதார சேவைப் பொறுப பாளர் அருண் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் என்றுமில்லாதவாறு அதிகரித் துள்ள கட்டாக்காலி நாய்களைக் கட்டுப் படுத்துவது பற்றிஆராயப்பட்டது.

இதன்போது கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்கான சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி நாய் வளர்ப்பவர்கள் தமது நாய்களை தாம் வதியும் பிரதேச சபைகளில் சென்று பதிவு செய்து அங்கு வழங்கப் படும் அடையாளங்களை நாய்களில் இடவேண்டும். அவ்வாறு அடையாளம் இடப்படாத நாய்கள் கட்டாக்காலி நாய்கள் எனக் கருதப்பட்டு அழிப்பு நடவடிக்கைக்குள்ளாக்கப்படும். வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசிகளைப் பிரதேச சபைகளில் சென்று போட்டுக் கொள்ள வேண்டும். எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் மக்களுக்கு முன்னறிவித்தல் வழங்கப்பட்டு பதிவு செய்து அடையாளம் இடப்படாத நாய்கள் அனைத்தும் அழிப்பு நடவடிக்கைக்குட்படுத்தப்படும. அது மட்டுமன்றி நாய் கடி பற்றியும் அதன் தாக்கம் பற்றியும் நாய்களை அழிப்பதன் அவசியம பற்றியும் மக்கள் மத்தியில் இணைந்த விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

எனவே, பொதுமக்கள் மேற்குறித்த தீர்மானங்களைக் கருத்திற் கொண்டு செயற்படுமாறு தமிழீழ நிர்வாக சேவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இக்கலந்துரையாடலில் தற்போது பெருமளவானவர்கள் நாய்க்கடிக்குள்ளாகி சிகிச்சை பெறுகின்ற போதிலும் பெருமள வானவர்கள் நாய்க்கடிக்கான சிகிச்சையின் முக்கியத்துவத்தை உணராது காலதாமதமாக மருத்துவ மனைகளுக்கு வருவதால் மோசமான நிலையை அடைவதோடு சிலவேளைகளில் மரணம்கூட சம்பவிக்க நேர்வதாகவும் கடந்த வாரம் ஒருவர் நீர் வெறுப்பு நோயினால் உயிரிழந் தமையையும் சுட்டிக் காட்டினார்கள்.

அண்மைக்காலங்களாக கட்டாக்காலி நாய்களினால் மக்கள் கடியுண்டு பாதிக்கப்பட்ட வண்ண முள்ளனர் கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையின் புள்ளி விபரங்களின்படி2003ஆம் ஆண்டு நாய் களினால் கடியுண்டவர்களுக்கு3128பேருக்குஅன்றிரெற்றனஸ்கிரம் ஊசியும், விசர்நாயினால் கடியுண்ட வர்களுக்கு 895பேருக்கு ஏ.ஆர். வி ஊசிமருந்தும், 2004 ஆம் ஆண்டு தை, மாசி மாதங்களில் நாயினால் கடியுண்டவர்களுக்கு ஏ.ரி.எஸ் ஊசி மருந்தும், 116 பேருக்கு ஏ.ஆர்.வி. ஊசி மருந்தும் போடப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

மேற்படி கலந்துரையாடலில் பிரதிமாகாண சுகாதாரசேவைப் பணிப்பாளர் சத்தியமூர்த்திவைத்தியகலாநிதி யூடிரமேஸ் ஜெயக்குமார். வைத்திய கலாநிதி சிவாநந்தன் கிளி., முல்லை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள், கிளி,முல்லை சுகாதார வைத்திய அதிகாரிகள், மிருக வைத்திய அதிகாரிகள், வைத்தியர்கள், தமிழீழ நிர்வாக சேவையினர், தமிழீழ சுகாதார பிரதிநிதிகள் எனப் பெருமள வானவர்கள் கலந்து கொண்டனர். (லோ,பி)

## தேர்தல் கடமை அலுவலர்களுக்கு முல்லைத்தீவில் பயிற்சி வகுப்பு

எதிர்வரும் 02.04.2004 அன்று நடைபெறவிருக்கின்ற பாராளுமன்றப பொதுத்தேர்தலின்போது கனிஸ்ட தலைமைதாங்கும் அலுவலர், எழுதுநர் ஆகக் கடமைக்கென இணைக்கப்பட்டவர்களுக்கான பயிற்சி வகுப்பு ஒன்று எதிர்வரும் 28.03.2004 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00மணிக்கு, முல்லைத்தீவு மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பயிற்சிகளை, முல்லை. மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், வன்னித் தெரிவித்தாட்சி அலுவலர் தே.கணேஸ், உதவி தேர்தல் ஆணையாளர் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

அனைத்து தேர்தல் கடமைக்கு நியமித்த உத்தியோகத்தர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு முல்லை. மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார். (20)

## 6 லட்சம் டொலர் அமெரிக்கா உதவி

பொதுத் தேர்தலைக் கண்காணிக்கும் நடவடிக்கைகளுக்காக அமெரிக்கா ஆறு இலட்சம் டொலர்களை நிதி உதவியாக வழங்கியுள்ளது.

இந்தநிதி மூன்று அமைப்புக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## படையினரை வீட்டிலிருந்து அகற்றி மீள்குடியமர ஆவன செய்க

### வடலியடைப்பு குடும்பஸ்தர் முறைப்பாடு

உயர்பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே உள்ள யாழ். வடலியடைப்பு எனுமிடத்தில் தனது வீட்டில் நிலைகொண்டுள்ள படையினரை அகற்றி தன்னை அங்கு குடியேறுவதற்கு வழிவகைகளை ஏற்படுத்தித் தருமாறு கோரி இலங்கை போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுவினரிடம் குடும்பஸ்தர் ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார்.

மேற்படி பகுதியில் உள்ள தனது வீட்டில் 1995 ஆம் ஆண்டுகளில் இருந்து நிலை கொண்டுள்ள படையினர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் கூட அங்கிருந்து அகலாது இன்னமும் அங்கு நிலை கொண்டுள்ளனர். இதனால் தனது குடும்பம்குடியமர இடமின்றி அலைந்து திரிவதாக சுட்டிக்காட்டியே இம் முறைப்பாட்டை அவர் செய்துள்ளார். (33)

## சந்தேகத்தில் 15 பேர் கைது

மாத்தளையில் தேர்தல் வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடும் நோக்கில் நடமாடிய 15 பேரை மாத்தளைப் பொலிசார் கைது செய்து காவலில் வைத்துள்ளனர்.இவர்களில் இருவர் இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றவர்கள்என்றும்ஏனையோர் பொலிசாரால் தேடிவந்த சந்தேக நபர்கள் என்றும்மாத்தளைப் பொலிஸ் அத்தியட்சகர் கூறியுள்ளார்.

## வாக்குப் பெட்டிகளை பாதுகாக்க நடவடிக்கை

(கொழும்பு)

வாக்குப் பெட்டிகள் திருடப்படுவது மற்றும் மாற்றப்படுவதைத் தடுப்பதற்கு சிறிலங்கா தேர்தல் ஆணையாளர் பல நடவடிக்கைகள் எடுத்துள்ளதாக அறிவித்துள்ளார்.

இதேவேளை வாக்குப் பெட்டிகள் திருடப்படாமலும், மாற்றப்படாமலும் தடுக்கும் ஒரு முறையாக ஸ்ரிக்கர் ஒட்டுவதற்கு சகல அரசியல் கட்சிகளுடனும் எதிர்வரும் 26ஆம் திகதி பேசி இறுதி முடிவு எடுக்கவுள்ளதாக, உதவி தேர்தல் ஆணையாளர் சேனநாயக்க கூறியுள்ளார்.

## புல்மோட்டை கனிப்பொருள் கூட்டுத்தாபனம் வெளிநாட்டு நிறுவனமொன்றிற்கு விற்பனை

### -அமைச்சரவை அங்கீகாரத்துடன் நடவடிக்கை

கனிப்பொருள் கூட்டுத்தாபனத்தை வெளிநாட்டு நிறுவனமொன்றிற்கு விற்பதற்கு அரசாங்கம்நடவடிக்கை எடுத்துள்ளது.

மேலும் அரசாங்கக கூட்டுத்தாபனத்தின் 40 சதவீதமான பங்குகளைதனியார் துறையினருக்கு, விற்பதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கனிப்பொருள் கூட்டுத்தாபனத்தை தனியார் மயப்படுத்துவதற்காக அரசியல் மறுசீரமைப்பு அமைச்சு, தனியார் மயப்படுத்துவதற்கான வழிகாட்டல் நிறுவனம் ஆகியவற்றின் ஆலோசனைகள் பெறப்பட்டுள்ளன. இதனால் வெளிநாட்டு நிறுவனங்கள் சுரண்டலுக்கு வழி வகுக்கும்.

மறுபுறம் 19ஆயிரத்து 778 கோடி ரூபா பெறுமதியான கனிப்பொருட்களைஅரசாங்கம் இழக்க நேரிடும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் முதல் கட்டமாக புல்மோட்டை கனிப்பொருள் கூட்டுத்தாபனம்அதன் உபகரணங்களையும் விற்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. புல்மோட்டையில் 16 ஆயிரம்தொன் கனிப்பொருட்கள் காணப்படுகின்றன.

இதேவேளை உலகிலுள்ள சிறந்த வகைகனிப்பொருட்களாகவும் இவை காணப்படு கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# உலகில் எதை இழந்தாலும் தாய்மொழியை இழக்க இயலாது!

### -கிளி.மாவட்ட தமிழ்ச்சங்கம் அறிவுறுத்து

(அலுவலக செய்தியாளர்)

"இந்த உலகிலே எதையும் இழக்கலாம்; மறக்கலாம் ஆனால் தாய் மொழியை இழக்க இயலாது, மறக்க முடியாது. தன் சொந்த மொழியை இழந்து மறந்து பிறமொழிப் பற்றுக் கொண்டு வாழ்தல் பொய்க் காலில் நடப்பதற்கு சமமாகும்".

இவ்வாறு 'தாய்மொழியைக் காப்போம்' என்ற தலைப்பில் கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; உலக வரலாற்றில், தாய்மொழிக்கு முதன்மை அளிக்க வேண்டும் எனஎண்ணிச் செயற்பட்டுக் கொண்டிருக்கும் நாடுகள் ஏராளம். அவைநாட்டின்மொழி வளர்ச்சியை சமுதாயத்தின் வளர்ச்சி என்று கருதி தனிக்கவனம் செலுத்துவதோடு மட்டும் நின்று விடாது நேரடியாகவும் செயற்படுத்தி வருகின்ற பாங்கினைப் பிரான்சு, உருசியா, இங்கிலாந்து, யப்பான், அரேபியா, ஜேர்மனி, சீனா போன்ற நாடுகளிற் காணலாம். பல நாடுகளில் தாய் மொழியைத் தவிர்த்து பிற மொழியைப் பயன்படுத்தினால் தண்டமும் , விதிக்கப் பெறுகின்றது.

தன்மொழியையும், தன்இனத்தையும், தன் நாட்டையும், தன் பண்பாட்டையும், தன்நாகரிகத்தையும் உயர்வாகக் கருதிய இனங்களே உயர்ந்து நிற்கின்றன: காக்கத்தவறிய இனங்கள் உயர்ந்ததாக வரலாறு இல்லை.

வடமொழி, லத்தீன் மொழி, பாளிமொழி, கிரேக்க மொழி, அரபிமொழி,சீப்ருமொழி, என்னும் பழமையான மொழிகள் அனைத்தும் சிதறிப்போன நிலையில், சிதையாமல் சீரிளமைத்திறத்துடன் வாழும் மொழி நம் தாய்மொழியாம் தமிழ் மொழி என்பதனை தமிழர்களே அறியாமல் வாழும் அவலத்தை யாரிடம் சொல்லி அழுவது?

ஒருவர் எத்தனை மொழியையும் கற்கலாம். ஆனால் ஆங்கில மொழிப்பற்றால் நம் தாய் மொழியை கீழ்நிலைக்குக் கொண்டுவந்துவிட்டோம். நம் மொழியை கேலிக்குள்ளாக்குவதன் மூலம் நம்மை நாமே கேலிக்குள்ளாக்குகின்றோம். உலக மக்கள் பலரும், தம் கையெழுத்தை, தாய் மொழியிற் போடுகின்றனர். அதோடு தமிழர். தம் கையெழுத்தை ஆங்கிலத்தில் போடும் விந்தை இங்கன்றி எங்கும் காணோம். எம் மொழியிற் பேசவும், கற்கவும், கையெழுத்திடவும் எங்கும் எதிலும் பயன்படுத்தவும் தயங்குவது கண்டு உலகம் நம்மைப் பார்த்து சிரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

பாலில் நீரைக்கலத்தல் சட்டப்படி குற்றம் என்கின்றோம். அரிசியில் கல்லைக்கலத்தல், எண்ணெயில் கலப்படம் செய்தல் இன்னவற்றையெல்லாம் கண்டிக்கிறோம்; தண்டிக்கிறோம். ஆனால், மொழிக் கலப்புக் கூடாது என்றால் அதனை வேறொரு பார்வை பார்க்கிறோம். முழுநந்தவர்கள் தூய்மையாகப் பேசினாலும், எழுதினாலும் முறைத்துப்பார்க்கிறோம்.

5000 ஆண்டுப் பழமையுடைய மூத்த மொழி, உலகத்தின் முதற் தாய்மொழியும் அது. அதன் தலைமையும், தாய்மையும், தொன்மையும், தூய்மையும், வன்மையும், நன்மையுமுடைய வளர்மொழி. நீண்ட நெடிய மரபுகளையுடையது. காலப்போக்கில் பிறமொழிக்கலப்பால் நிலைகுலைந்தது. தனித்தமிழ் பற்றாளர்களின் சான்றோர்களின் தொண்டினால் தமிழ் வளர்ந்து வருகின்றது.

17,000 இற்கு மேற்பட்ட வேங்கைகளும், தமிழ்ப்பெயாது மக்களும், தமிழ்மொழியின் விடுதலைக்காகவும் தமிழ் இன, மான மேம்பாட்டிற்காகவும் தங்களின் இன்னுயிரை ஈகையாக அளித்துள்ளனர்.

இந்த உலகிலே எதையும் இழக்கலாம்; மறக்கலாம். ஆனால், தாய்மொழியை இழக்க இயலாது, மறக்கமுடியாது. தன்சொந்த மொழியை இழந்து, மறந்து, பிறமொழிப்பற்றுக் கொண்டு வாழ்தல் பொய்க்காலில் நடப்பதற்கு, சமமாகும்.

எனவே,

1. எம் கையெழுத்தை தமிழில் இடுவோம்.
2. குடிநீரைத் தூயநீராகக்காத்தல் போலத் தமிழை முழுநிறைவு தூயதமிழாய்ப் பேசுவோம்.
3. வாழ்த்துக்கள்; வரவேற்புக்கள், அழைப்பிதழ்கள், அறிவித்தல்கள், பெயர்வைத்தல்கள் எல்லாம் நல்ல தமிழ் பைங்குழல்கள் வளரும் பைந்நிலங்களாக மிளிரவைப்போம்.
4. பணிமனைகளில் ஆங்கிலத்தில் மட்டும் வெளியிடப்படும் அறிக்கைகள், தகவல் திரட்டுகள், புள்ளிவிபரங்கள், கோவைகள் என்பவற்றில் தமிழும் இடம் பெறச்செய்வோம். (சிங்களப்பகுதிகளிலிருந்து வெளிவருபவை சிங்களத்தில் மட்டும் இருப்பது குறிப்பிடத்தக்கது)
5. எந்த இனமும் தந்தம் மொழியைப் பேச -பேண முன்வருவது போலத் தமிழையும் தமிழர்களாகிய நாமும் பேண முன்வருவோம்.
6. தமிழ் உணர்வு கொண்டு தமிழ்ச்சிந்தனையால் தமிழ் நாகரிகம், பண்பாடு காப்போம்.
7. எல்லாத்துறைகளிலும் எல்லாக் கூட்டங்களிலும் தமிழ்வாழ, தமிழ்வளர, தமிழ் வாழ்வு வாழ விழைவோம். (கோ)

# வீட்டுச் சின்னம் தாங்கிய ஊர்திகளுடன் குடாநாட்டில் எழுச்சிமிகு தேர்தல் பிரச்சாரம்

(யாழ்ப்பாணம்)

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் தேர்தல் சின்னமான வீட்டுச் சின்னம் தாங்கிய ஊர்திகளில் சென்று தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு வேட்பாளர்களும் ஆதரவாளர்களும் தீவிர பிரச்சார நடவடிக்கை களில் ஈடுபட்டு வருகின்றனர்.**

வீட்டுச் சின்னத்தை சித்த ரிக்கும் விதத்திலான ஏராளமான ஊர்திகளில் சிவப்பு மஞ்சள் கொடி கள் பொங்குதமிழ் கோஷங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகள், தமி ழீழ எழுச்சிப்பாடல்கள் என்பன சகிதம் இப்பிரச்சாரங்கள் கிரா மம் கிராமமாக முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.

மிக எழுச்சிபூர்வமாக இடம் பெற்றுவரும் இப்பிரச்சாரங்களில் தமிழீழ விடுதலைப்புலிகள், கூட்டமைப்பு வேட்பாளர்கள், ஆதர வாளர்கள்,பல்கலைக்கழக மாண வர்கள், பொது அமைப்பினர், தேசிய எழுச்சிப் பேரவையினர் எனப்பல தரப்பினரும் ஈடுபட்டு வருகின் றனர்.

இவர்கள் ஊரூராகச் சென்று மக்களைச் சந்தித்து கலந் துரை யாடியும், கூட்டங்களைக் கூட்டி கருத்துகளை வழங்கியும் வீதி நாடகங்கள் காண்பித்தும் ஆத ரவுதிரட்டும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். (33)

# போர் அனர்த்தத்திலிருந்து தப்பிப்பிழைத்த பனைவளத்தைப் பாதுகாக்க முன்வருக

## தமிழீழ பொ.மே.நிறுவனம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கடந்தகால போர் அனர்த்தங்களால் அழி வுற்று எஞ்சியுள்ள பனைவளங் களையாவது பாதுகாப்பதற்கு மக்கள் விழிப்புடன் செயற்பட வேண்டும் என தமிழீழ பொருண் மிய மேம்பாட்டு நிறுவனம் யாழ். குடாநாட்டு மக்களிடையே வலியு றுத்தி வருகிறது.

கடந்த காலத்தில் யாழ். குடா நாட்டில் இடம்பெற்ற ராணுவ ஆக் கிரமிப்பு நடவடிக்கைகளால் 20 லட்சத்திற்கு மேற்பட்ட பனை மரங் கள் அழிக்கப்பட்டுள்ளன. இவ் வாறு அழிக்கப்பட்ட போதும் எஞ் சியுள்ள பனைவளங்களை பேணிப் பாதுகாக்கும் விதத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவ னம் தீவிர நடவடிக்கைகளை குடா நாட்டில் ஆரம்பித்துள்ளது. அந்த அடிப்படையில் பனை மரங்களை மக்கள் வீணாகத் தறித்தழிப்பதைக் கட்டுப்படுத்தும் விதமாகவே மக்கள் விழிப் புணர்வுடன் செயற்படவேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தி வருகின்றனர். (33)



கிளிநொச்சி கரடிப்போக்கு-உருத்திரபுரம் வீதியில் அதி கரித்தவேகத்தில் சென்ற உழவு இயந்திரம் ஒன்றுகட்டுப் பாட்டினை மீறி பிரதான நீர்ப்பாசனவாய்க்காலினுள் தூக்கி வீசப் பட்டநிலையில் உள்ளதனை படத்தில் காணலாம். இந்த வீதியல் அடிக்கடி இவ்வாறான விபத்துக்கள் இடம்பெற்று வருவதோடு உயிரிழப்பும் சம்பவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(படம் சோதி)

# படையினரால் கைவிடப்பட்ட பகுதிகளில் குடியேறத் தடை

யாழ். வசாவிளான் பகுதியில் உள்ள படையினரால் கைவிடப் பட்ட பிரதேசங்களில் மக்கள் மீளக் குடியமர்வதற்கு படையினர் பெரும் முட்டுக்கட்டையாக இருந்து வரு கின்றனர்.படையினரால் கைவிடப் பட்ட பகுதிகளில் காணப்படும் குடி யிருப்புப் பகுதிகளில் உள்ள மிதி வெடிகளை அகற்றி அப்பகுதி மக்களை குடியேற்றுவதற்கு நடவ டிக்கை எடுத்த போது மேற்படி பகுதியில் உள்ள மிதிவெடி களை அகற்றுவதும் அப்பகுதிகளில் மக்கள் குடியேறுவதும் தமது பாது காப்பிற்கு குந்தகமாக அமையும் என்பதை சுட்டிக்காட்டி படையினர் அதற்கு அனுமதி மறுத்து வருகின் றனர்.


## இலங்கை மின்சாரசபை-யாழ்ப்பாணம்

# வீடு வாடகைக்குத் தேவை

**இலங்கை மின்சாரசபையின் கிளிநொச்சி மின் பாவனை யாளர் சேவை நிலையப் பாவனைக்கு கிளிநொச்சி நகரை அண்டிய பகுதியில் பஸ் நிலையத்திலிருந்து ½ கி.மீற் றருக்கு உட்பட்டதாக கீழ்வரும் வசதிகளுடன் வீடொன்று உடனடியாக வாடகைக்குத் தேவைப்படுகின்றது. கண்டி வீதி யில் அமைந்துள்ள வீடுகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.**

1. தளப்பரப்பு 2000 சதுர அடி
2. வாகனம் நிறுத்துமிட வசதி
3. கிணறு, கழிப்பிட வசதி
4. வீடு அமைந்திருக்கும் காணி 4 பரப்புக்குக் குறையாமல் இருந்தல் வேண்டும்.

**வீட்டு உரிமையாளர்கள் வீடு சம்பந்தமான சகல விப ரங்கள், மாதாந்த வாடகை, வீடு அமைந்துள்ள இடம், வீட் டின் மொத்தப் பரப்பளவு போன்ற விபரங்களை 06.04.2004ம் திகதி 02.00 மணிக்கு முன்னர் பதிவு அஞ்சல் மூலம் கீழ்க் குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.**

பிரதிப் பொது முகாமையாளர் (வடக்கு)
இலங்கை மின்சார சபை,
536/1, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

**உங்கள் கூறுவிலைக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வீடு வாடகை" என குறிப்பிடவும்.**

**பிரதிப் பொதுமுகாமையாளர் (வடக்கு)**
**"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்"**
**இலங்கை மின்சாரசபை.**

(சி.9275)





“ ”

உ

சிவமயம்

# நாகதம்பிரான் நல்லருள் நாடெங்கும் பாலிக்குக

கரைச்சி

## புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயஆண்டுற்சவப் பொங்கல்

## (04-04-2004)

## விழாவின்போது வாணிபம் மேற்கொள்ளும் வாணிபர்களுக்கான

## அறிவித்தல்

மேற்படி பொங்கல் விழா 4.4.2004 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. விழாவின் போது வாணிபம் மேற்கொள்ளும் வாணிபர்கள் எதிர்வரும் 28.03.2004 ஞாயிறு முற்பகல் 10.00 மணிக்கு வியாபார நிலை யங்களுக்கான ஏலவிற்பனை ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

குறிப்பு:-

உணவு கையாளும் நிலைய உரிமையாளர்கள் தமிழீழ சுகாதார சேவையினரின் கலந்துரையாடல் 30.03.2004 செவ்வாய் ஆலய முன்றலில் மு.ப.10.00 மணிக்கு நடைபெறவுள்ளதால் சகல உணவு கையாளும் உரிமையாளர்களும் தவறாது கலந்துகொள்ளவும், தவறும் வாணிபர்களுக்கு நிலைய அனுமதி வழங்கப்படமாட்டாது.

(சி.9428)

ஆலய பரிபாலனசபை.



சிந்தனைக்கு

சுதந்திர எழுச்சியின் உந்துதலால் தான் மனித வரலாற்றுச் சக்கரம் சுழல்கின்றது.

தமிழீழத்தேசியத் தலைவர்.


ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 25-03-2004


## வழி செய்க அன்றி வழிவிடுக!

"தெற்கில் தேர்தலுக்குப் பின் ஆட்சிக்கு வரும் அரசு விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள தன்னாட்சி அதிகாரசபையை தமிழ் மக்களுக்குத் தர வேண்டும். அவ்வாறு செய்யாது விடில் தனி வழிசெல்வதே தமிழ் இனத்தின் இயல்பு வாழ்க்கைக்கான ஒரே இறுதி மார்க்கம். இத்தகைதொரு முடிவைச் சர்வதேச சமூகம் ஆதரித்து அங்கீகரிக்கத்தயாராக இருத்தல் வேண்டும்." என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருமலை மாவட்ட முதன்மை வேட்பாளர் இரா. சம்பந்தனின் கோரிக்கையானது முற்றிலும் நியாயபூர்வமானதே ஆகும்.

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில், சர்வதேசத்தின் பாத்திரம் எத்தகையதென்பது இன்று உறுதிப்படுத்தப்பட வேண்டியதொன்றாகவே இருக்கின்றது. ஏனெனில், விடுதலைப்புலிகள் இயக்கம் இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண்பதற்கான தன்னாலான ஒத்துழைப்பை ஏற்கனவே போதியளவு வழங்கியுள்ளது.

சிறிலங்கா ஆட்சியாளர் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வில் எத்தகைய நிலைப்பாட்டைக் கடைப்பிடிப்பார்கள் என்பது குறித்து தமிழ் மக்களுக்கு போதிய வரலாற்றுப் படிப்பினைகள் இருப்பினும் கூடக் கடந்த முறை விடுதலைப்புலிகள் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்விற்கென மிகப்பெரும் ஒத்துழைப்பை வழங்கினர்.

ஆனால், பொதுப்பார்வையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கும், அரசியல் தீர்விற்கான விடயத்தில் ஒத்துழைப்பை வழங்கியவராகவே நடந்துகொண்டார். இருப்பினும் வரலாற்று ரீதியான செயற்பாடுகளே கடந்த முறையும் சிறிலங்காவில் அரங்கேறின அதாவது எதிர்க்கட்சியின் கடுமையான எதிர்ப்பின் காரணமாக இம்முயற்சி தோல்வியில் முடிவடைந்தது.

அதிலும் குறிப்பாக இம்முறை சிறிலங்காவில் இரண்டு அதிகார மையங்கள் இருந்ததினால் எதிர்க்கட்சியினர் சமாதான முயற்சிகளைக் குழப்பியடித்ததோடு மட்டுமல்ல அரசாங்கத்தையே கவிழ்த்து, பொதுத் தேர்தல் ஒன்றிற்கு வழிவகுத்தனர். இந்நிலையில் ஏப்ரல் 2ம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது.

இதேவேளை விடுதலைப் புலிகள் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான நகல்த்திட்டத்தை முன்வைத்ததைத் தொடர்ந்தே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தைக் கலைப்பதற்கான நடவடிக்கைகள் சனாதிபதி சந்திரிகாவினால் முன்னெடுக்கப்பட்டன என்பது நிதர்சனமானது. அதாவது, சமாதான முயற்சிகளுக்கு வெளிப்படையான எதிர் நடவடிக்கையாகவே இது அனைவராலும் கொள்ளப்பட்டிருந்தது.

ஆனால் பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் எதிரணியினரால் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான எதிர்ப்பு படிப்படியாகக் குறைக்கப்பட்டுள்ள அதேவேளை, இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காணப்படும் என எதிர்க்கட்சியினர் உறுதி கூறி வருகின்றனர். அதாவது இத்தேர்தலில் இரண்டு பிரதான கட்சிகளுமே சமாதானம் குறித்தே பேசிவருகின்றன. சமாதானத்தை வலியுறுத்தியே வாக்குவேட்டையிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், அடுத்து ஆட்சிக்கு வரும் எந்தக்கட்சியும் இனப்பிரச்சினைக்கு சமாதானத்தீர்வு காண்பதைக் கடப்பாடாகக் கொண்டவை. அதிலும் குறிப்பாக வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கான இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை ஒன்றை தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டிய கடப்பாடு அவர்களுக்கு உண்டு.

ஆகையினால் இம்முறை தேர்தலில் எக்கட்சி வெற்றி பெறினும் அவை தன்னாட்சி அதிகாரசபையை உருவாக்கப் பின்நிற்பதோ அன்றி ஆட்சியைக் கைப்பற்றுபவர்கள் இச்சபையை உருவாக்க முற்படுகையில் எதிர்க்கட்சி இதற்கு எதிராகச் செயற்படுதோ ஏதுவாக இருப்பினும் சமாதானத்திற்கு எதிரான செயற்பாடாகவே கொள்ளத் தக்கதாகும். இவ்வாறு ஏதுவும் நடக்குமானால் சர்வதேச சமூகம் முன் எப்பொழுதும் இல்லாத வகையில் இவ்விடயத்தில் அக்கறைகாட்டுதல் வேண்டும்.

சர்வதேச நாடுகள் ஒவ்வொன்றும் தனியாகவோ அன்றி கூட்டாகவோ தமது நலன் சார்ந்த அடிப்படையில், செயற்படுகின்றதென்பதும், சில கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு செயற்படுகின்றன என்பதும் தெரிந்ததொன்றே. ஆனால் அவை எத்தகைய கோட்பாடுகளைக் கொண்டவையாக இருப்பினும் தமது நலன் குறித்த அணுகுமுறையைக் கொண்டவையாக இருப்பினும் அந்நாடுகள் நடுநிலைமையுடனும் இனப் பிரச்சினை தீர்வு விடயத்தில் அக்கறை கொண்டவையாக உள்ளன என்பதையும் வெளிப்படுத்த வேண்டுமானால் அவை தன்னாட்சி அதிகார சபை ஒன்று உருவாக்குவதற்கான நிர்ப்பந்தத்தை சிறிலங்கா அரசாங்கத்திற்கு கொடுத்தல் வேண்டும்.

அவ்வாறு இல்லாவிடின் -அதாவது அழுத்தத்தைக் கொடுக்க முடியாத நிலையோ அன்றி அழுத்தத்திற்கு சிறிலங்காவின் புதிய அரசு செவிசாய்க்காது போனாலோ தமிழ் மக்கள் தமது இயல்பு வாழ்க்கையை வாழ்வதற்கென தனிவழி செல்வதற்கான அங்கீகாரத்தை அளிக்க சர்வதேச சமூகம் முன்வருதல் வேண்டும். அதுவே சர்வதேச சமூகம் நீதியான செயற்பாட்டைக் கொண்டதாகக் கருதுவதற்கு வழிவகுக்கும்.

# தலைவரின் தலைமைத்துவத்தில் போராட்டத்திற்கு ஊறு விளைவிக்கும் தீயசக்திகள் அழிவுறும்

## -கூட்டமைப்பு வேட்பாளர் என்.ஸ்ரீகாந்தா

(யாழ்ப்பாணம்)

ஆயிரமாயிரம் வீரர்களின் தியாகத்தால் கட்டி வளர்க்கப்பட்ட எமது விடுதலைப்போராட்டத்தை கூறுபோட்டுவிட சில தீயசக்திகள் திட்டமிட்டு வருகின்றன. ஆனால் எமது தலைவர் பிரபாகரன் தலைமைத்துவத்தில் இத்திட்டங்கள் எதுவும் பலித்து விடாது. என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட வேட்பாளரான என்.ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்.நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் பிரச்சாரக்கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத்தெரிவித்தார்.

இன்று எமது இனத்தின் விடுதலைப்போராட்டம் தேசியத்தலைவர் பிரபாகரன் தலைமையில் இராணுவரீதியிலும் பின் அரசியல் ரீதியிலும் மிக அவதானத்துடன் நகர்ந்து கொண்டிருக்கிறது. ஆனால் இதனைக் குழப்பி அரசியல் சுயலாபம் தேடும் முயற்சியில் சில தீயசக்திகள் முனைப்புக் காட்டிவருகின்றன. எனினும் எமது விடுதலைப் போராட்டம் தடம் மாறிப்போய் விடாது இன விடுதலை என்ற தன் இலட்சியத்தை அடையும்வரை இப்போராட்டம் தொடர்ந்து தனது இலட்சியப் பாதையிலேயே செல்லும். அந்த அடிப்படையில் சன நாயக ரீதியில் தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமையைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதில் புலிகள் ஆர்வம் காட்டிவருகின்றனர். இதற்காகவே தமிழினத்தின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் விதமாக எதிர்வரும் தேர்தலில் போட்டியிடும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை அவர்கள் ஆதரிக்கின்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(33)

# புத்தளத்தில் சனாதிபதி பணிப்பிற்கமைய கிராமசேவையாளரை ஆதரவு தர நிர்ப்பந்தம்

(கொழும்பு)

புத்தளம் மாவட்டத்திலுள்ள அனைத்து கிராம சேவையாளர்களும் சனாதிபதியின் பணிப்பிற்கமைய இரகசியமாக அழைக்கப்பட்டு தமக்கு ஆதரவளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் புத்தளம் மாவட்ட வேட்பாளரும் முன்னாள் பொ.ஐ.மு உறுப்பினருமான தஸ நாயக்காவின் வீட்டில் நடைபெற்ற சந்திப்பில் மாவட்டத்திலுள்ள அனைத்து கிராம சேவையாளரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிறன்று இரகசியமாக நடத்தப்பட்ட இச்சந்திப்பு சனாதிபதியின் உத்தரவிற்கிணங்க நடத்தப்பட்டுள்ளது. கிராமசேவையாளர்களுக்கான "கடிதத்தில்" தங்களை தனிப்பட்ட முறையில் சந்திக்குமாறு சனாதிபதி என்னைப் பணித்திருப்பதாலும் இது ஒரு அத்தியாவசிய சந்திப்பென்றதாலும் சில விடயங்களைத் தங்களுக்கு விளக்குவதற்காகவும் வருகை தரவும்'' என மேற்படி தஸநாயக்கா வின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அத்துடன் இது மிகமிக அத்தியாவசியமானதும் தனிப்பட்ட பிரச்சினை தொடர்பான சந்திப்பென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கான காரணம் இதுவரை அறியப்படவில்லை.

# ஹெல உறுமயவுக்கு எதிராக பிரச்சாரம்; இரு பௌத்த பிக்குகள் மீது தாக்குதல்

ஜாதிக ஹெல உறுமய சார்பில் தேர்தலில் போட்டியிடும் பௌத்த பிக்குகளுக்கெதிராக அனுராதபுரம் வைத்தியசாலைக்கு முன்பாக துண்டுப்பிரசுர விநியோகத்தில் ஈடுபட்டிருந்த இரு பிக்குகள் மீது தாக்குதல் நடைபெற்றுள்ளது. தாக்கப்பட்ட இரு பிக்குகளும் ஜே.வி.பி. ஆதரவாளர் எனவும் தாக்கியோர் ஜாதிக ஹெல உறுமய ஆதரவாளர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. காயப்பட்ட பௌத்த பிக்குகள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# ஒப்பந்தத்தை உரியவகையில் மதிக்கவில்லை பிரிட்டிஷ் உயர்நீதிமன்றில் அரசு மீது வழக்கு

(கொழும்பு)

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தன்னுடன் செய்துகொண்ட ஒப்பந்தம் சரியான முறையில் மதிக்கப்படவில்லை. இவ்வாறு பிரித்தானிய தொடர்பாடல் நிறுவனம் ஒன்று சிறிலங்கா அரசுக்கு எதிராக பிரித்தானிய உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

இலங்கை அரசு தம்முடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை மதிக்கத் தவறிவிட்டதாகவும் பெல்போட்டிங்கர் எனப்படும் மக்கள் தொடர்பாடல் அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

இந் நிறுவனத்திற்கு 73 ஆயிரத்து 500 ஸ்ரேலிங் பவுண்கள் இதுவரை சனாதிபதியால் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சிறிலங்காவின் ஆட்சி அதிகாரம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கைகளுக்கு மாறிய பின்னர் பிரித்தானிய மக்கள் தொடர்பாடல் நிறுவனத்திற்கான மீதிக் கொடுப்பனவை வழங்க சனாதிபதி நடவடிக்கை எடுக்கவில்லை. அதேநேரம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசும் மறுப்புக் கூறிவிட்டது என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

# தபால்மூல வாக்களிப்பை சீர்குலைக்க ஐக்கிய தேசிய முன்னணி முயற்சி

## -ஐ.ம.சு.முன்னணி ஆட்சேபம்

(கொழும்பு)

தபால் மூலமான வாக்களிப்பினை சீர்குலைப்பதற்கு, ஐக்கிய தேசிய முன்னணி நடவடிக்கை எடுத்துள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி குற்றம் சாட்டி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. யாழ்ப்பாணம் மற்றும் பருத்தித் துறை பிரதேசங்களில் பதிவு செய்யப்பட்ட தபால் மூல வாக்காளர்களின் எண்ணிக்கை 20 ஆயிரம் ஆகும்.இருந்தபோதும இதுவரை 7 ஆயிரம் பேருக்கே தபால் மூல வாக்குப் பத்திரங்கள் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன. இதனால் அரசாங்க ஊழியர்களும் முப்படையினரும் வாக்களிக்க முடியாத நிலையில் உள்ளனர்.

இதனால் தபால் மூல வாக்களிப்புக்குறித்துக் கவனம் செலுத்த வேண்டும் என்று தேர்தல் ஆணையாளரை அறிக்கை மூலம் கேட்டுக் கொண்டுள்ளது.

## -சிறிலங்கா - அவுஸ்திரேலியா இறுதி டெஸ்ட்-


# முதல்நாள் ஆட்டநேர முடிவில் அவுஸ். 314/6

சிறிலங்காவுக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையிலான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட்போட்டி நேற்று எஸ்விசி மைதானத்தில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலியா முதலில் துடுப்பெடுத்தாடுவதாக தீர்மானித்து நேற்றைய முதல்நாள் ஆட்ட நேர முடிவின போது ஆறு விக்கெட்டுக்களை இழந்து 314 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

அணித்தலைவர் ரிக்கி பொண்டிங் 92 ஓட்டங்களையும் டரன்லீமன் 104 ஓட்டங்களை ஆட்டம இழக்காது பெற்றுள்ளார்.

பந்து வீச்சில் சமிந்தவாஸ் மூன்று விக்கெட்டுக்களையும், முரளிதரன் இரண்டு விக்கெட்டுக் களையும் கைப்பற்றினர். இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும்.



## கூட்டமைப்புக்கு....

கைத் தமிழர் ஆசிரியர் சங் கம் தனது வருடாந்த மாநாட்டிலும், சர்வதேச கல்வியியல் சார்க் மாநாட்டிலும் ஆசிய பசுபிக்பிராந்திய தமிழ் ஆசிரியர் மாநாட்டிலும், உலகக்கல்வி மாநாட்டிலும் இலங்கை தமிழாசிரியர் சங்கம் தனது ஏகமனத்தான தீர்மானங்களை நிறைவேற்றி யுள்ளது.

இலங்கைத்தமிழராசிரியர் சங்கத்தின் இவ் அரசியல் கொள்கையின் அடிப்படையில் போட்டியிடும் ஒரேஒரு தமிழ்கட்சி தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்பதினால் தாம் இதற்கு ஆதரவு வழங்கியதாக தெரிவித்து இச்சங்கம் அறிக்கை ஒன்றையும் நேற்று வெளியிட்டுள்ளது.

அத்துடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர்க்குச்சார்பாக துண்டுப்பிரசுர விநியோகம், இக் கட்சிக்கு ஆசிரிய சமுகத்தின் ஆதரவை திரட்டும் முயற்சிகள் தமிழராசிரியர் சங்கத்தினரால் நேற்றுமுதல் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. (33)

## உள்ளூர்....

கின்றனர். சிறிலங்காக் கடற்படையினரின் ஒத்துழைப்புடன் இந்திய மீனவர்கள் செய்த இவ் அடாவடித்தனங்களால் வடமராட்சி மீனவர்களுக்குச் சொந்தமான 3 லட்சம் ரூபாய்க்கும் மேற்பட்ட பெறுமதியான மீன்பிடி உடைமைகள் சேதப்படுத்தப்பட்டுள்ளன. இது குறித்து வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசச் செயலாளர் எல். சூரியகுமார் தன் கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளார். (33)

## அரசியல்துறைப்....

துறைச் செயலகத்திற்கு முன்பாக நின்றிருந்த போராளிகளிடம் அப்பகுதிகளில் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஈ.பி.டி.பி.யினரின் யாழ். மாவட்ட வேட்பாளர் மதனராஜா தலைமையிலான குழுவினர் தம்வசமிருந்த பிரச்சார துண்டுப் பிரசுரங்களை வற்புறுத்தித் திணிக்க முற்பட்டுள்ளனர்.

இதனால், இருதரப்பினர்க்குமிடையே ஏற்பட்ட வாக்குவாதத்தையும், முறுகல் நிலையையும் தொடர்ந்து அப்பகுதியில் குவிந்த பொதுமக்கள் ஈ.பி.டி.பி.யினரைத் தாக்கத் தயாரானவேளை அவர்கள் அவ்விடத்தைவிட்டு நழுவிச் சென்றுள்ளனர்.

படையினரின் பாதுகாப்புடன் ஈ.பி.டி.பி.யினர் செய்த இவ் அடாவடித்தனம் தொடர்பாக யாழ். மாவட்ட அரசியல்துறையினரால் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் முறைபாடு செய்யப்பட்டுள்ளது. (33)

## இராணுவச்...

ரம் யார் அளவான இந்த இராணுவ உடைகளுக்கான துணியை மலேசியாவில் உள்ள இலங்கை வர்த்தகர் ஒருவர் வெள்ளவத்தையில் உள்ள வர்த்தகர் ஒருவருக்கு அனுப்பியிருந்தார் இதன் சந்தைப்பெறுமதி 35 லட்சம் ரூபாவாகும். சம்பவம் தொடர்பில் 6 பேர் வரை கைது செய்யப்பட்டுள்ளனர். (32)

## பரபரப்பான ஒருநாள் ஆட்டத்தில் இந்தியா வெற்றியீட்டியது

இந்தியா-பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நேற்று லாகூரில் நடைபெற்ற ஐந்தாவதும் இறுதியுமான ஒருநாள் போட்டியில் இந்தியாபாகிஸ்தானை 40 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

பகல்-இரவு ஆட்டமாக நடைபெற்ற மேற்படி போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணித் தலைவர் இந்தியா அணியை துடுப்பெடுத்தாட பணித்தார் இந்தியா நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் 7விக்கெட்டுக்களை இழந்து 293 ஓட்டங்களை பெற்றது.

துடுப்பாட்டத்தில் வி.வி.எஸ். லக்ஸ்மன் 107 ஓட்டங்களையும், கங்குலி 45 ஓட்டங்களையும், சச்சின் 36 ஓட்டங்களையும் அதிபட்சமாக பெற்றனர் பந்து வீச்சில் முகமட்சமி 3விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

பதிலுக்கு 294 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பாட்டத்தை ஆரம்பித்த பாகிஸ்தான். ஒருகட்டத்தில் 90ஓட்டங்களுக்கு ஆறுவிக்கெட்டுக்கள் என்ற மிகமோசமான நிலையில் இருந்து மலிக்,மொயின்ஹான் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் தனது ஓட்ட எண்ணிக்கையை அதிகாரித்த போதும் 48வது ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 253 ஓட்டங்களையே பெறமுடிந்தது.

மலிக் 65 ஓட்டங்களையும் மொயின்ஹான் 72 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றனர் பந்துவீச்சில் இர்பான்பதான் 3விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

இப்போட்டித்தொடரை 3-2 என்ற நிலையில் இந்தியா கைப்பற்றியதன் மூலம் பாகிஸ்தான் மண்ணில் ஒருநாள் தொடரை கைப்பற்றிய முதலாவது சந்தர்ப்பமாகின்றது. போட்டியின் சிறப்பாட்டக்கரராக வி.வி.எஸ் லக்ஸ்மனும் தொடரின் சிறப்பாட்டக்கரராக இன்சமாம் உல்ஹக்கும் தெரிவாகினர்.

## பாதுகாப்பு...

பிடிப்போடு இருக்கிறார் என்பதைதான் இன்னமும் முழுமையாக நம்புவதாகவும் போரை ஒரு முடிவிற்கு கொண்டுவருவதற்கு அனைவரும் விரும்புவதாகவும் ரணில் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை ஐ.தே.கட்சி மீண்டும் அரசாங்கத்தை அமைத்தால் ஏப்ரல் மாத இறுதியில் மீண்டும் முதல் கட்ட சமாதான பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படுமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐ.தே.கட்சி எப்போதுமே தெளிந்த பொறுமையுடன் இருப்பதாகவும் இலங்கையின் இனப் பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலேயே ஒரே தீர்வு என்ற அடிப்படையில் எமது கட்சி இருப்பதாக தெரிவித்த ரணில்,

சனாதிபதியின் ஐ.ம.சு.முன்னணி தெளிவான கொள்கையுடன் இல்லை எனவும் அதேநேரம் விடுதலைப்புலிகளுடன் சொல்லக் கூடிய எந்தவொரு தீர்வுத்திட்டமும் இல்லையெனவும் ரணில் விக்கிரமசிங்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதேவேளை ஐ.ம.சு.முன்னணி ஆட்சிக்கு வந்தால் சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடம்பெறாது மீண்டும் நாடு பாதாளத்துக்குச் செல்ல வேண்டிவரும் எனவே ஐக்கிய தேசியக்கட்சிதான் ஆட்சி அமைக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்,

அதேநேரம் ஒஸ்லோ பிரகடனத்தின் அடிப்டையில் இலங்கைக்கு கிடைக்க வேண்டிய தீர்வு அந்த பிரமாணத்தின் அடிப்படையில் கிடைத்தால் அதிலிருந்து விலகிக்கொள் வதற்கு விடுதலைப்புலிகளோ அல்லது அரசாங்கமோ எந்த நிலையிலும் முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.(32)

## தவறுசெய்த....

களையும் கைப்பற்றுமென எதிர் பார்க்கின்றோம்.யாழ்.மாவட்டத்தில் நீதியானதும், நேர்மையாதுமான தேர்தல் நடைபெறுமானால் நாம் அதிக ஆசனங்களையும் இரண்டாவதாக ஆனந்த சங்கரியும் மூன்றாவ தாக தமிழ் தேசியக்கூட்டமைப்பும் ஆசனங்களைக் கைப்பற்றும் என்றார்.

## யுத்தமில்லாத....

துக்காக முதலில் குரல் கொடுத்தவர் நமது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பண்டாரநாயக்கவே நாட்டில் சமாதானம் ஏற்பட வேண்டும் என்பதற்காகத் தமது வாழ்க்கையை சனாதிபதி அர்ப்பணித்து செயலாற்றி வருகின்றார் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக சனாதிபதி, சனாதிபதி நிதியத்திலிருந்து கூடுதலான பணத்தை ஒதுக்கிவந்துள்ளார்'' என்றும் மைத்திரி பாலசிறிசேன கூறினார் ஜப்பானில் தேசிய வருமானத்தில் 22 சதவீதம் கல்வி அபிவிருத்திக்கே செலவிடப்படுகின்றது எதிர்வரும் காலத்தில் நமது நாட்டிலும் கல்விக்குக் கூடுதல் நிதி ஒதுக்கும் நிலை உருவாகும் இந்த நிகழ்வில் பங்குபற்றவேண்டும் என்று சனாதிபதி விரும்பியிருந்தார் தற்போதைய நிலவரம் அதற்கு இடங்கொடுக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.(25)

## புலிகள்....

தமிழர் தேசிய ஒருமைப்பாட்டை சீர்குலைக்க சில சக்திகள் எப்பொழுதும் அக்கறையாக இருந்து வந்திருக்கின்றன. தமிழீழ விடுதலைப்புலிகளைப் பலவீனப்படுத்த வேண்டும் என்பதில், தமிழீழத் தேசியத் தலைவரினுடைய வழி நடத்தலிலே கட்டி எழுப்பப் பட்டிருக்கின்ற தேசியப் பலம் இந்தத் தமிழ்த் தேசிய பலத்தை உடைப்பதற்கூடாகவே தமிழ் மக்களை ஒடுக்குமுறைக்கு உள்ளாக்குவது அல்லது தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வை பெற முடியாமல் தடுப்பதற்கோ அதுதான் சாத்தியப்பாடான ஒரு நடவடிக்கை. அந்த அடிப்படையில் தமிழீழ விடுதலைப்புலிகளைப் பலவீனப் படுத்த எல்லாச் சக்திகளும் நீண்ட காலமாக முயன்று கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு காலகட்டத்திலும் அது தோற்கடிக்கப்பட்டுள்ளது.

எங்களுடைய தேசியத் தலைவருடைய தீர்க்கதரிசனமும், அவருடைய சரியான வழி நடத்தலும், அதன்பால் மக்களுடைய பங்களிப்பும் ஒட்டு மொத்த மக்களும் சேர்ந்து அவரின் பின்னால் அணி திரண்டு நிற்கின்ற காரணத்தினால் கடந்த காலங்களிலே துரோகத்தனங்களையும் இப்படியான முயற்சிகளையும் நாங்கள் முறியடித்துள்ளோம்.

நான் ஒரு வரலாற்றை உங்களுக்குச் சுட்டிக்காட்ட வேண்டும். ஒவ்வொரு கட்டத்திலுமே - சந்திரிகா அம்மையாராக இருக்கலாம் - ஆட்சி பீடம் ஏறிய இனவாத அரசுகள் எதைச் செய்தன என்றால் எப்பொழுதுமே தமிழீழ விடுதலைப்புலிகள் இப்பொழுது பலவீனப்பட்டிருக்கிறார்கள். ஆகவே இந்த நேரத்தில் நாங்கள் ஓர் இராணுவ நடவடிக்கையை அவர்கள் மீது திணிப்பதற்கூடாக தமிழர்களுடைய தேசியப் பலத்தைச் சிதைத்து விடலாம் என்ற கனவை மிக நீண்ட காலமாக கண்டு முயற்சியும் எடுத்திருக்கின்றார்கள்.1995ஆம் ஆண்டு சந்திரிகா அம்மையாரும் அதனைத்தான் குறிப்பிட்டார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் பலவீனப்பட்டிருக்கிறார்கள். அவர்களை நாங்கள் குறிப்பிட்ட காலத்திற்குள்ளே கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து விடுவோம். அழித்துவிடுவோம் என்று நாட்கள் குறிப்பிட்டிருந்தார்கள்.

யாழ்ப்பாணத்திலே நடந்த யுத்தத்திலே நாங்கள் சில நகர்வுகளைச் செய்தபோது தமிழீழ விடுதலைப்புலிகள் முற்றாகப் பலவீனப்பட்டு விட்டார்கள் என்றொரு பிரச்சாரத்தைச் செய்து கொண்டுதான் பெரியதொரு இராணுவ நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. அந்தச் சூழ்நிலையில்தான் நாங்கள் முல்லைத்தீவு இராணுவ முகாமை அழித்து ஒரு பாரிய இராணுவ வெற்றியைக் காட்டினோம். அதற்குப் பின்னர் கிளிநொச்சித் தளத்தை அழித்து கிளிநொச்சிப் பகுதி முழுவதையும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தோம். அதன் பின்னர் ஜெயசிக்குறு நடவடிக்கையை முறியடித்தோம். இப்படி தொடர்ச்சியான இராணுவ வெற்றிகள் எல்லாம் நடந்து கொண்டிருக்கும். ஒவ்வொரு கட்டத்திலும் நீங்கள் பார்த்தீர்களானால், அவர்கள் குறிப்பிடுவார்கள் விடுதலைப்புலிகள் பலவீனப்பட்டு விட்டார்கள் என்று தமிழீழ விடுதலைப்புலிகளினுடைய பலத்தை உறுதிப்பாட்டை எங்கள் தேசியப் பலத்தைச் சிதைப்பதற்காக தென்னிலங்கையில் எவ்வளவோ இனவாத ஊடகங்கள் நீண்ட காலமாக முயற்சி எடுத்துக் கொண்டிருக்கின்றன. தவறான செய்திகளைப் பிரசுரித்துக் கொண்டிருக்கின்றன.

அவர்களுக்கு இப்போ கருணாவின் விடயம் ஒரு இனிப்பாகக் கிடைத்திருக்கின்றது. அதை அவர்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். அதுவும் சமாதானக் காலத்திலே கருணாவின் விடயத்தைப் பூதாகரமாக்குவதற்கும் பெரிதாக்குவதற்கும் வாய்ப்பான காலமாகவும் இருக்கிறது.

இந்த நிலையில் கருணாவினுடைய விவகாரத்தை எடுத்து தமிழீழ விடுதலைப்புலிகள் பலவீனப்பட்டிருக்கிறார்கள், என்ற தவறான கருத்தைக்கொண்டு முடிவுகளை எடுப்பார்களேயானால் அதன் விளைவுகளை அவர்களே அனுபவிப்பார்கள். கடந்த காலங்களிலும் அனுபவித்திருக்கிறார்கள்.

அண்மைக்காலத்தில் அதிகார பூர்வமாக வெளிப்படையாக வருகின்ற அறிக்கையப் பார்தீர்களேயானால் கருணாவிற்கு வெளிப்படையான ஆதரவை வழங்க எவருமே முன்வரவில்லை. அதற்குக் காரணம் சிங்களத் தேசத்திலே வாழுகின்ற சிங்கள மக்கள் கூட அதனை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஏனெனில் அவர்கள் சமாதானத்தையும் அமைதியையும்; தீர்வையும் அவர்கள் விரும்புகின்றார்கள்.

அந்த அடிப்படையில் அந்தக் காரணத்தினாலேயே வெளிப்படையாக அவர்களுக்கு அந்தக் கருத்துக்களை முன்வைக்க முடியாமல் இருகிறது.

சர்வதேச சமூகத்தின் மத்தியிலே ஒரு கணிப்பீடு இருக்கின்றது. இரண்டரை வருடங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்ட இணக்கம் காணப்பட்ட விடயங் களைக்கூட நடைமுறைப்படுத்தாத நிலையிலே தமிழீழ விடுதலைப்புலிகள் பலகட்டங்களில் சீண்டப்பட்டு ஆத்திரமூட்டப் பட்ட நிலையிலும், எவ்வளவு பொறுமை காத்துக் கொண்டு இந்த சமாதான முன்னெடுப் புக்களை அர்ப்பணிப் போடு முன்னெ டுத்து வந்தார்கள் என்பது சர்வதேச சமூகத்திற்கும் தெரியும்.

அந்த அடிப்படையில் சர்வதேச சமூகத்திற்குக்கூட அவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளுடைய தலைமையுடனேயே தங்களுடைய சகல தொடர்புகளும் முன்னெடுத்துச் செல்லப்படும் என்று சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள் என்ற நிலைப்பாட்டை வைத்துக் கொண்டு நாங்கள் ஒன்றைப் புரிந்து கொள்ளலாம். யதார்த்தம் என்பது 'இதுதான். தமிழீழ விடுதலைப்புலிகள் பலமாக இருக்கின்றார்கள். கருணாவினுடைய விவகாரம் தமிழீழ விடுதலைப்புலிகளைப் பலவீனப் படுத்தவில்லை. தமிழீழ விடுதலைப்புலிகள் ஒரு வலுவான பலமான, உறுதியான நிலையில் இருக்கின்றார்கள். அந்த நிலையில் தமிழ் மக்களினுடைய எதிர் காலத்தை நிர்ணயிக்கின்ற வலுவான சக்தியாக தமிழீழத் தேசியத் தலைமை தன்னுடைய செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லும் என்பதிலே நாங்கள் அசைக்க முடியாத நம்பிக்கையுடன் இருக்கின்றோம்.

கருணா இன்று அப்படியான நிலைமைக்கு போனால் அது தன்னுடைய தனிப்பட்ட பலவீனம். தனிப்பட்ட ரீதியான அவரது பாலியல் பலவீனங்களையும் தனிப்பட்ட ரீதியான மோசடிகள் பத்திரிகைகள், ஊடகங்கள் மூலம் போராளிகளினால் வெளிப்பட்டுக் கொண்டிக்கின்றது.

அங்கே ஒரு போராளி ரஞ்சன் என்பவர் மாரடைப்பினாலே வீரச் சாவடைந்ததாக எங்களுடைய தலைமைப் பீடத்திற்கு அறிவிக்கப்பட்டது. அவர் மிக நல்ல நிலையில் இருந்த ஒரு போராளி நல்ல ஆரோக்கியமான நிலையிலே இருந்த ஒரு போராளி, நீண்ட கடினமான பயிற்சி பெற்றவர். அப்படியான இறுக்கமான ஒரு போராட்ட வாழ்க்கையைக் கொண்ட போராளி. மாரடைப்பு வந்து இறப்பதென்பது சந்தேகத்திற்கிடமானது. எங்களுடைய தலைமைப்பீடத்திற்கும் அதில் சந்தேகம் வந்தது. பின்னாளில் இவர் நிதி நடவடிக்கை சம்பந்தமாக எங்களுடைய நிதிப் பிரிவினூடாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் தான் அந்த உண்மையும் வெளிப் பட்டது.

அவரைக்கூட இவருடைய நிதி மோசடிகளை நேரடியாக அறிந்தவர் என்ற ரீதியில்- அவருக்குப் பல விடயங்கள் தெரிந்தவர் என்ற ரீதியில் அவர் அந்தச் செய்தியை வெளியில் விட்டுவிட்டார். அவர் சில போராளிகள் முன்னாலே அச்சுறுத்தப்பட்டு தாக்கப்பட்டு போராளிகள் முன்னாலே கருத்துச்சொல்ல விடப்பட்டு அடுத்த நாள் அவர் இறந்துள்ளார். அது அங்குள்ள போராளிகள் பொறுப்பாளர்களுக்குப் பெரியதொரு குழப்பத்தை ஏற்படுத்தியது. இது எல்லாம் அங்கே நடந்த சம்பவங்கள். இவற்றில் ஒரு சிலவற்றைத்தான் நான் சொல்கின்றேன்.

ஆகவே இந்த வகையில் அவர் தன்னுடைய தனிப்பட்ட பலவீனங்களையும் மோசடிகளையும் மறைப்பதற்காகவே அவர் இன்று எங்களுடைய தமிழ்த் தேசியத்தைச் சிதைப்பதற்கும் தமிழ்த்தேசிய நிலைப்பாட்டை, தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமையை, தமிழீழ விடுதலைப்புலிகளை விமர்சிப்பது போன்ற பல நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார். அவர் இன்று தமிழ்த் தேசியத்தைச் சிதைக்கின்ற சக்திகளுடன் இணைந்திருக்கின்றார் என்றால் அது தன்னுடைய சுயநலத்திற்காக தன்னுடைய தனிப்பட்ட பலவீனங்களை மறைப்பதற்காகத்தான்.

எங்களுடைய அமைப்பைப் பொறுத்தவரை நான் இன்னுமொன்றையும் சொல்லவேண்டும். போராளிகள், பொறுப்பாளர்கள் என்ற எந்த வேறுபாடும் இல்லை. எங்களுடைய அமைப்பிலே கட்டுப்பாடு மிக உயர்வாகக் கருதப்படுகிறது பேணப்படுகின்றது. அது போராளிகளாக இருக்கலாம் பொறுப்பாளராக இருக்கலாம், மூத்த உறுப்பினர்களாக இருக்கலாம். பலமூத்த உறுப்பினர்கள் பொறுப்பாளர்கள் மீது கூட பல கட்டங்களிலே ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. கருணாவிற்கும் அந்த அடிப்படையில் அந்த ஒழுங்கு அடிப்படையில்தான் அவருக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அவர் இன்று நீங்கள் குறிப பிட்டது போல அவருக்கு எல்லாச் சலுகைகளும் கொடுக்கப்பட்டு முன்னுரிமை கொடுக்கப்பட்டதால் மாறினார் என்பதைவிட அவருடைய தனிப்பட்ட பலவீனங்கள் தான் அவரை மாற்றியது.

ஏனெனில் கருணாவிற்கு முன்னுரிமையை எங்களுடைய தலைவர் கொடுக்கவில்லை. அந்தப் பிரதேசத்திற்கும் அந்த மக்களுக்கும் தான் கொடுக்கப்பட்டது. அந்த அடிப்படையில் கருணா வினுடைய இந்தத் துரோகத்தனங்கள் அந்த மக்களையும் அந்தப் பிரதேசத்தையும் மீண்டும் அழிக்கின்ற பேரழிவிற்குள்ளாக்கின்ற நோக்கோடு செய்யப்படுகின்றதே ஒழிய அது உண்மையிலேயே அந்தப் பிரதேசத்தின் நலன்களை அடிப்படையாக வைத்துச் செய்யவில்லை.


# வேலையாட்கள் தேவை

மில் அனுபவம் வாய்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தங்குமிடம், உணவுவசதிகள் உண்டு. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்புக்கு-

சிவனருட்செல்வன் அரிசி ஆலை

உருத்திரபுரம் வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி. (கி-9280)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.